
# மொழி பெயர்க்கப்படாத மௌனங்கள்



வெ. துஷ்யந்தன்

ஜீவநதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்க்கப்படாத மௌனங்கள்

வெ.துஷ்யந்தன்

**ஜீவநதி வெளியீடு**
**கலை அகம்**
**அல்வாய்**
2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி பெயர்க்கப்படாத மௌனங்கள் ➢ கவிதைகள் ➢ ஆசிரியர்: வெ.துஷ்யந்தன் ➢ ©வெ.துஷ்யந்தன் ➢ முதல்பதிப்பு : ஒக்டோபர் 2011 ➢ வெளியீடு: ஜீவநதி கலைஅகம், அல்வாய் ➢ மின்னஞ்சல்: bvthushy@yahoo.com ➢ அச்சுக்கோப்பு: மதிகலர்ஸ், நல்லூர் ➢ அட்டை வடிவமைப்பு: க.பரணீதரன் ➢ பக்கங்கள்: xv+73 ➢ விலை: 200/= ➢

**ஜீவநதி வெளியீடு:10**

நூலாசிரியரின் பிற நூல்: வெறிச்சோடும் மனங்கள்

**Molipeyarkapadatha mounankal** ➢ Poems ➢ Author: V.Thushyanthan ➢ ©V.Thusyanthan ➢ Language: Tamil ➢ First Edition: October 2011 ➢ Published by Jeevanathy, Kalaiaham, Alvai ➢ E-mail: bvthushy@yahoo.com ➢ Printed at Mathy colours, Nallur ➢ Cover designed by K.Bharaneetharan ➢ Pages: xv + 73 ➢ Price: 200/= ➢

ISBN: 978-955-52787-1-3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

அப்பப்பா
வே.பாலசிங்கம் அவர்களுக்கும்
ஐயா
நா.கிருஷ்ணபிள்ளை (செட்டியார்)
அவர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

க.பரணீதரன்
வெ.சிந்துஜன்

**ஜீவநதி, மல்லிகை,**
**ஞானம், படிகள்,**
**யாதும், காற்றுவெளி,**
**உதயன், இருக்கிறம், தினக்குரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனத்தின் வழியே ...


பதிப்புரை

அணிந்துரை

வாழ்த்துரை

துஷ்யந்தன் கவிதைகள் பற்றி இவர்கள்...

என்னுரை

1. எங்கிருந்தோ வந்தாள்
2. கனவுகளைச் சுமந்தோம்
3. நிஜங்களின் நிழலைத்தேடி
4. வாழ்தலின் இருப்பியல்
5. புதிர்களால் நிறையும் வாழ்வு
6. கனவுகளில் கழியும் காலம்
7. தந்தி அறுபட்ட வீணைகளாய்
8. சும்மா இருத்தல் பற்றி
9. கருக்கள் கலைகின்ற காலம்
10. உதட்டில் புன்னகை தொலைத்தோம்
11. மொழிபெயர்க்கப்படாத மௌனங்கள்
12. ஆரோகணங்களும் அவரோகணங்களும்
13. எழுத முடியாத வலிகள்
14. அச்சப்பிராந்திய இரவுப் பிரகடனம்
15. நீயாகிப் போன நான்
16. நீயில்லா வேளை பார்த்தே
17. வலிகளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்
18. எந்தன் சாம்பல்களிடையேயும்
19. மேய்ப்பன் இல்லாத மந்தைகள்
20. புயலென எழுவாய் அவனியில்
21. அவளின் வார்த்தைகளுக்கு மட்டுமே
22. அந்த இடத்தாலான எனது அந்தரமுறு பயணம்
23. ஆறாம் அறிவை சந்தேகித்தலாய
24. என்னை எதுவும் கேளாதீர்கள்
25. முறிந்திடாத எங்கள் வீட்டு வாழை
26. பேசா மடந்தையாய்
27. விழி மூடித்தூங்கா இரவுகள்
28. மனதோடு மழைக்காலம்
29. பாட மறந்த குயில்கள்
30. மனக் கதவை மோதும் சஞ்சலங்கள்
31. பாலைவனத்திலோர் பனை நிழலாய் என் நகரம்
32. ஒரு பூபாளம் முகாரி ஆகின்றது.
33. இறுகிய இதயம்
34. நிரம்பாத வெற்றிடங்கள்
35. தலைப்பில்லா கவிதைகள்
36. மீளும் நினைவுகள்– 2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜீவநதியின் பத்தாவது வெளியீடாக ஜீவநதியின் துணைஆசிரியர் வெ.துஷ்யந்தனின் "மொழி பெயர்க்கப்படாத மௌனங்கள்" கவிதைத் தொகுதியை ஜீவநதி வெளியீடாக வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். ஜீவநதியின் துணைஆசிரியராக இருந்து கொண்டு இலக்கியத்துறையில் தனது கால்களை ஆழப்பதித்து வருபவராக வெ.துஷ்யந்தன் காணப்படுகின்றார். இளம் கவிஞரான வெ.துஷ்யந்தனின் முதலாவது கவிதைத் தொகுதியான "வெறிச்சோடும் மனங்கள்" வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றதோடு 500 பிரதிகளும் விற்றுத் தீர்ந்து விட்ட நிலையில் இவரது இத்தொகுப்பும் வாசகர் உள்ளங்களைக் கவரும் என்பதில் ஐயம் இல்லை.

இத்தொகுப்பில் 36 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் ஒரு இளைஞனின் மனப் பரப்பில் இருந்து வெளியான உணர்வுகளாக இருப்பினும் மொத்த தமிழ் மக்களது உணர்வாகவும் காணப்படுகின்றது.

வெ.துஷ்யந்தன் கவிதையுடன் ஏனைய துறைகளிலும் ஆழமான படைப்புக்களை படைத்து அவையும் நூலுருப் பெற வேண்டும் என அவரை வாழ்த்துகின்றோம்.

**க.பரணீதரன்**
**ஆசிரியர் ஜீவநதி**
**2011.10.12**

**கலைஅகம்**
**அல்வாய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## புறத்திணை உள்வாங்கும் அகவயக் கவிதைகள்

கவிதையின்பம் உளத்தையும் சிந்தனையையும் பரவசப்படுத்தும் ஓர் அனுபவம். அவ்வனுபவத்தைச் செட்டாகப் பரிவர்த்தனை செய்பவன் கவிஞன். கவிஞனின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள நுகர்வோன் பாதி வழி சென்று தரிசனம் பெறுகின்றான். கவிதை, கவிஞன், நுகர்வோன் சம்பந்தப்படும் சம்மேளனம் கவிதைக் கொத்து. நமக்குக் கிட்டிய கவிதைத்தொகுதி "மொழிபெயர்க்கப்படாத மௌனங்கள்". நமது கவிஞன், இளைஞன் வெற்றிவேல் துஷ்யந்தன், "ஜீவநதி" என்ற சிறப்புமிகு மாதாந்த இலக்கிய இதழின் துணைஆசிரியனாவான். இந்நூலில் 84 பக்கங்களுள் 36கவிதைகள் இடம்பெறுகின்றன. அவ்வாய், கலைஅகம், ஜீவநதியின் 10ஆவது வெளியீடாக இந்தக் கவிமாலை வெளிவந்துள்ளது.

இத்தொகுப்பில் இடம் பெற்ற கவிதைகள் அகவயமானவை. அதாவது Subjective and personal poems. அதே வேளையில் அர்த்தம் எதனையும் பதிக்காத வெறும் மனோரதியக் கற்பனை வடிப்புகளுமல்ல. மாறாக 'அந்தரப்படும்' ஆத்மாவொன்றின் ஏக்கப் பெரு மூச்சை இக்கவிதை வரிகளில் நாமும் சுவாசிக்கிறோம். நல்லவேளையாக, ஆழ்ந்த சோகத்தினூடாக விரக்தியும், ஏமாற்றமும் தோன்றாமல், வைர நெஞ்சமும், புத்துயிர்ப்பும் தோன்றுவதனால் , கவிதை தான் பிறக்கிறது.

இக்கவிதைகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக, உள்ளடக்கம், உருவம் என்று பகுப்பாய்வு செய்து கருத்துரை வழங்குவதற்குப் பதிலாக, கவிதையெனக் கூறத்தக்க எழில்மிகு வரிகளை இங்கு சுட்டிக்காட்டலாம் என எண்ணங் கொண்டேன். கவிதைகளைப் படிக்கும் ஒவ்வொருவரும் தத்தம் அளவில் அக்கவிதைகளை ரசிப்பர்.

துஷ்யந்தன் போர்க்காலத்தில் வாழ்ந்து அவதிப்பட்டு மனம் சோர்ந்த வடபுல இளைஞர்கள் பரம்பரையில் ஒரு வகைமாதிரி யுவன். இந்த மகனுக்குள் சொல்லாத செய்திகள் நிறைய உள்ளன. அவற்றில் சிலவற்றையேனும் சொல்லாமற் சொல்லி விளங்கப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளான்.

இது எப்படி என்று பார்ப்போம். உதாரணத்திற்கு இவருடைய கவிதையொன்றை முழுமையாகப் படிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுகளைச் சுமந்தோம்

எதைக் கொண்டும்
நிரப்ப முடியாத
வாழ்வின் கணங்களை
எதிர்பார்ப்புகள் நிறைந்த
கனவுகளால் நிரப்பியே
வாழ்ந்து வந்தோம்.
கடந்து வந்த காலங்களைப் போல
எம் கனவுகள் வெறும்
கானல் நீராகத்தான்

தமிழ்க்கலாசாரத்தின்
தாய்வீடு என்றும்
தமிழ்க்கலாசாரத்தின்
சின்னமென்றும்
எம் மண்ணை நாமே
பிதற்றிக் கொண்டோம்.

இன்று
உதட்டு வழி வார்த்தைகளில்
மட்டும் தான் கலாசாரம்
பேசி நிற்கின்றோம்
திட்டமிடப்பட்ட திணிப்புகளுக்குள்
நின்று கொண்டு
கனவுகளைச் சுமந்தோம்.
இப்படி எம் கனவுகள்
குலைந்த மாயம் தான் என்னவோ?
காலப் பெரு வெளியில்
நாம் சுமந்த
காட்டாற்றுத் துயர அலைகளின்
ஓசைகள்
இன்னும் எம் செவிகளில்.

கால்கள் போன திசையில்
காடு மேடெல்லாம்
நாம் நடந்தோம்.
துயரச் சிலுவைகளை சுமந்தோம்
இருப்பினும் நம்பிக்கைச் சுவர்கள்
இன்னும் எம்முன் பலமாகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாத ரணங்களின்
வலிகளினால்
நடைப்பிணங்களானோம்.
இப்போது எந்தன் நகரத்தில்
எங்களின் காலடித் தடங்களும்
சிதைவுற்ற குடில்களும் தான்
கண்காட்சிகளாகிப்போயின.

கனவுகளைச் சுமந்தோம்
இந்த அவலங்களுடனான வாழ்வு
எழுச்சி பெறும் வரை
கனவுகளையே சுமப்போம்
கனவுகளில் வாழ்வோம்.

இந்தக் கவிதை என்ன கூறுகின்றது என்பதையும் நாம் வலிந்து பொருள் கொள்ள வேண்டிய அவசியமில்லாமல் நேரிடையாகவே யதார்த்த வாழ்நிலையைச் சித்திரிக்கிறது. அதே வேளையில் நம்பிக்கையுடன் கூடிய ஒரு கனவு எழுச்சிக்கு இடம் வகிக்கும் என்ற முடிவுடன் நாம் அமைதி காண்கிறோம்.

எடுத்துக் கொண்ட பொருள் சொற்சிக்கனத்துடனும், ஒரு internal உடனும், துரித காட்சிப் படிமங்களுடனும் இயல்பாய் அமைவதை நாம் காண்கிறோம். இவ்வாறே பெரும்பாலான கவிதைகள் உருப்பெற்றுள்ளன. சில கவிதைகளில் சில வரிகள் என்னைக் கவர்ந்திழுத்தன.

"சுமைகளின் இருப்புக்கள் – எம்
இமைகளின் வழியே நீர் சொரியும்
இச் சும்மா இருத்தல் கூட
ஒரு வகையில்
அணு அணுவாய் மனதைக் கீறிடும்
சுகம் தரும் சுமைதான்" (சும்மா இருத்தல் பற்றி...)

"எந்தன் சாம்பல்களினிடையேயும்" என்ற கவிதையும் மனதைக் கவருகின்றது.

"என்னுள் நிகழ்ந்து கொள்ளும்
முரண்பாட்டுத் தர்க்கிப்புக்கள்
என்னிலும்
எந்தன் சொற்களிலும்
தங்களுக்கான எதிர்வினைகளை
பிரதிபலிக்கின்றன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்தலின் இருப்பியல்" கவிதையில்...
"சருகுகளிடையே
ஒளிந்து கொள்ளும் ஓணான்களாய்
இருத்தலுக்காய்
நகர்ந்து கொண்டிருக்கிறது
வாழ்வு..."

"இயலாமையோடு
சலனம் கொள்ளும் வாழ்வு"

" வாழ்வு என்னும் வட்டத்தினுள்
'ரீமிக்ஸ்' பாடல்களாய்
புதுப்பித்த படியே
வாழ்ந்து கொண்டிருக்கின்றான்."

"மேய்ப்பன் இல்லாத மந்தைகள்" என்னும் கவிதையில்...
"உயிரைத் துளையிட்டுச் சென்ற
வேதனை மிகு நினைவுகள்
அனல் பரப்பிச் செல்கின்றன
இதயத்தினுள்"

இவ்வாறே, "நிஜங்களின் நிழலைத்தேடி", "கனவுகளில் கழியும் காலம்", "ஆறாம் அறிவை சந்தேகித்தலாய்", "இறுகிய இதயங்கள்" ஆகியவையும் வேறு சிலவும் சிறப்பான கவிதைகளாக வடிவம் பெற்றுள்ளன. இளைய நண்பர் வெ.துஷ்யந்தன் கவிதைகளில் காணப்படும் சொற்சிக்கனமும், உணர்வும், சிந்தும் சிந்தனைகளும் ஒரு 30 வருட யாழ் வாழ் மக்களின் கடந்து போன காலப் பகுதியை நினைவூட்டுகின்றன.

நல்லதோர் கவிஞனுக்கு இலக்கிய உலகில் வாயில் திறக்கப் பட்டிருக்கிறது. வாழ்க.

**கே.எஸ்.சிவகுமாரன்**
**2011.10.08**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## வாழ்வியலின் துயில்

தன் உள்ளத்து உணர்வுகளை மிக அழகாய் ஆழமாய் சொற்களால் நெய்திருக்கிறார் நண்பர், யதார்த்தங்களைப் பதிவு செய்கையில் தான் கவிதை உணர்வு பூர்வமாகிறது.

அந்த வகையில், ஈழத்து மண்ணில் இருந்த வரும் நண்பரின் இக்கவிதைத் தொகுப்பு மனதின் அடியாழத்தில் புகுந்து மண்ணின் வலியையும் ரணங்களையும் பதிவு செய்கிறது.

பூபாளத்தை மட்டும்
ஆலாபனை செய்து வந்த
எங்களின் நெஞ்சத்து வீணைகள்
இப்போது முகாரியை
நிரந்தரமாகத் தன்னில்
ஆலாபனை செய்து கொள்கின்றது.

என்று வாழ்வியலின் நிராகரிப்பு மிகுந்த வலியையும்

எந்தன் நகரத்தைத் தான்
எல்லாவற்றுக்கும் குறிவைக்கின்றது
போர் அரக்கன் நிலையாக
எம்மிடத்தே வழங்கியுள்ள
ஆறாத ரணங்களும்
மாறாத வடுக்களும் தான்
இப்போது எல்லோருக்கும்
பார்வைப் பொருளாய்

என்று ரணத்தின் அடியில் வடிந்து கொண்டிருக்கும் ரத்தத்தையும் பதிவு செய்கிறது.

தொடர்ந்து எழுதுங்கள். கவிதை வானம் தொட்டு விடும் தூரத்தில் தான். கனவு மெய்ப்பட வாழ்த்துக்கள்.

**வித்தகக்கவிஞர் பா.விஜய்**
**தமிழ்நாடு**
**இந்தியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துஷ்யந்தன் கவிதைகள் பற்றி இவர்கள்...

*வளரும் பயிரை முளையில் தெரியுமென்பார்கள்*
*இந்த முளையைப் பார்த்தால்...*
*வளரும் பயிராக அல்ல*
*வளர்ந்த பயிராக அல்லவோ தெரிகிறது...*
*சிந்தனைச் சிறகுபூட்டி,*
*கவித்துவ ஆழம்காட்டி,*
*அனுபவச் செறிவு கூட்டி,*
*அழகியல் உணர்வு மீட்டி,*
*இளமையும் முதிர்வும் ஏற்றி,*
*தனித்துவ வடிவம் நாட்டி,*
*ஆச்சர்யம் கொள்ள வைக்கின்றன அனேகம் கவிதைகள்!*
*"வாழ்தலின் மீதமாயும்*
*எச்சமாயும்*
*நிரம்பியிருப்பது ஏன் எதற்கு என்ற*
*கேள்விக்கணைகள் தான்" எனும்படிக்கு*
*கேள்விகளின் முதுகில் ஏறி*
*ஓயாமற் புரிகின்ற தேடல்*
*தொகுதி முழுதும் நிறைந்திருக்கிறது.*
*இந்த இளையவனின்*
*பார்வைப் புலமும் அனுபவப் புலமும் மேலும் விரிந்து*
*கவித்துவம் செழித்துச் சிறக்க வாழ்த்துக்கள்.*

**- த.ஜெயசீலன்**

*பால் நிலவு இறங்கி வந்து*
*பாராட்டு சொல்லுமப்பா*
*யாழ்ப்பாண கவியுந்தன்*
*நல்ல கவி கேட்டாலே*
*வாழ்வைப் பாடுகின்ற*
*வற்றாத கவியூற்றாய்*
*வரலாறு பேசட்டும் - உந்தன்*
*வளமான கவிதைகளை...*

**- நாச்சியாதீவு பர்வீன்**

*கல் உருக்குள் கரு வளர்த்துக் கனலும்*
*ஆயிரம் இறக்கைகள் விரித்து எழும்*
*ஆத்மாவைத் தொட முனையும் சத்திய ஆவேசம்*
*பிரளயம் கொண்ட தொடர் வெளிச்சம் படர*
*வரும் சத்திய எண்ணங்கள்*

**- கல்வயல் வே.குமாரசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் உங்களோடு . . .

வணக்கம் என் உறவுகளே! வாசலிலேயே உங்களை நான் வரவேற்றுக் கொள்கின்றேன். இன்றைய நாள் எனது இலக்கியப் பயணத்தில் இன்னொரு பொன்னானநாள். ஆம். மொழிபெயர்க்கப்படாத மௌனங்கள் என்னும் எனது இரண்டாவது கவித்தொகுப்பை உங்கள் கரங்களில் தவழவிட்டிருக்கின்றேன். நினைத்துப் பார்க்கின்றபொழுது இனம்புரியாத இன்ப ஊற்று என்னுள் பொங்கிப் பிரவாகித்துக் கொண்டிருக்கின்றது. கடந்த வருடம் "வெறிச்சோடும் மனங்கள்" என்ற எனது முதலாவது கவித் தொகுப்பை நான் வெளியீடு செய்திருந்தேன். மீண்டும் எனது இரண்டாவது தொகுப்பின் வெளியீடு இன்றைய நாளில் சாத்தியமாகியிருக்கின்றது. இந்த இரண்டு தொகுப்புகளுக்கும் இடையிலான காலப்பகுதி என்னைப் பொறுத்தவரை சிறிது காலமாக இருப்பினும் இந்த ஒருவருட காலப்பகுதி என்னிலும், எனது கவிதைகளிலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஆரோக்கியமான மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கின்றது என்பேன்.

கவிதைகளை பொறுத்தவரை விதிகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் இடையில் நின்றுகொண்டு எழுதுவதில் எனக்கு உடன்பாடுகள் ஏதும் கிடையாது. படைப்பாளி சுதந்திரமானவன், சுதந்திரமாக எழுத முடியாது போயினும் சுதந்திரமாக சிந்திக்கும் ஆற்றல் உள்ளவனாக இருக்க வேண்டும். கவிதைகளின் மொழிக்கையாள்கை என்பது எல்லோருக்குமான புரிதல்களாக இருக்க வேண்டும் என்ற கொள்கையிலேயே நான் எனது கவிதைகளில் மொழியை பிரயோகிப்பதுண்டு. அவ்வாறான வகையில் வெளியானதே எனது முதல் தொகுப்பு. "வெறிச்சோடும் மனங்கள்" எனது கவிப்பயணத்தின் அடையாளமே" இவ் வெறிச்சோடும் மனங்கள் தொகுப்பு ஆகும். மனம் விட்டுச் சொல்ல வேண்டுமாயின் பல மூத்த, சமகால, படைப்பாளிகளால் பாராட்டப்பட்ட ஒரு தொகுப்பாகவும் எனது முதல் தொகுப்பு "வெறிச்சோடும் மனங்கள்" இருக்கின்றது. மக்களின் பிரச்சினைகள், துயரங்கள், அவலவாழ்வு என பலதரப்பட்ட உணர்வுகளை முதல் தொகுப்பில் பதிவு செய்திருந்தேன். அதுவே எனக்கான ஒரு அங்கீகாரத்தையும் பெற்றுத் தந்தது என்பேன்.

படைப்பு மனம் என்பது பரந்துபட்டது. படைப்புக்கான கருவை பொறுத்தவரை புனைவுகளையும், கற்பனாவாதத்தையும் புகுத்துவதில் எதுவித உடன்பாடுகளும் எனக்கில்லை. உள்ளதை உள்ளவாறு எழுதவேண்டும் என்பதே எனது அவா. இவ்வாறு எழுதுவதில் சில சிக்கல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் முடிந்தளவு அப்படி எழுதுவதையே நான் விரும்பிவிடுவதுண்டு. யதார்த்தம் தான் எப்போதும் ஒரு படைப்புக்கு உயிரூட்டிவிடுவதுண்டு. "மொழி பெயர்க்கப்படாத மௌனங்களும் அப்படித்தான். நமது வாழ்வு வெளிகளில் ஆங்காங்கே படர்ந்திருக்கின்ற ஜீரணிக்கமுடியாத துன்பங்கள், ஆறாத புண்களாய் இதயத்தை கூறுபோடும் துயரநினைவுகள், உள்ளுக்குள் குமுறிக்கொண்டிருக்கும் உணர்வுகள் என ஒவ்வொன்றுக்கும் இத்தொகுப் பில் நான் மொழிபெயர்ப்பு கொடுத்திருக்கின்றேன். எனது கவிதைகள் ஒவ்வொன்றும் யதார்த்தப் போக்கில் அமைய வேண்டும் என்பதில் நான் தீவிரமாக இயங்கிக் கொண்டிருப்பவன், அவ்வளவு தான். "மொழிபெயர்க்கப் படாத மௌனங்கள்" ஜீவநதியின் பத்தாவது வெளியீடு 2009இல் ஆரம்பித்த ஜீவநதியின் பதிப்பு முயற்சி மிகவும் துரிதமாக இயங்கிக் கொண்டிருக் கின்றது. எனது முதல் தொகுப்பும் "ஜீவநதி" வெளியீடாக வெளியாகி யிருந்தது. இதுவும் எனது தொகுப்புக்கு இன்னொரு பலம் என்பேன்.

முதல் தொகுப்பு வெளியாகி பதினாறு மாதங்கள் கடந்த நிலையில் எனது இரண்டாவது தொகுப்பு இன்று வெளியாகியிருக்கின்றது. இவ் இரண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நான் எழுதிக்குவித்தவை ஏராளம். இக்காலகட்டம் பலபல புதிய வாசிப்புக்கள், புதிய கவி நண்பர்களின் அறிமுகங்களையும் எனக்குத் தந்திருந்தது. ஜீவநதியின் துணை ஆசிரியராக இருப்பதனால் ஜீவநதிக்கான அறிமுகங்கள் எனக்கும் சாதகமாக அமைந் திருந்தன. இக்கால கட்டத்தில் இருந்து இற்றைவரை ஆரோக்கியமான கருத்துக்களோடு என்னோடு இணைந்து கொள்ளும் நண்பர்கள், மூத்தவர்கள் ஏராளம். அவ்வகையில் மேமன்கவி, வதிரி சி.ரவீந்திரன், வே.ஐ.வரதராஜன், செ.கணேசன், மன்னார் அமுதன், நாச்சியாதீவு பர்வீன், த.அஜந்தகுமார், பெருமாள்ஶ்ரீ, சி.நிமலன், அஸ்மின் என இப்பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது. இவர்கள் எல்லோரையும் இக்கணம் நான் நினைந்து கொள்கிறேன்.

அடுத்து இன்றைய நூல் வெளியீட்டை எடுத்துக் கொள்ளின் இன்று பதிப்பு முயற்சியோடும், சஞ்சிகை வெளியீட்டோடும் சமாந்தரமாக பயணிக்கும் ஒரே சஞ்சிகையாக இருக்கின்ற "ஜீவநதி" சஞ்சிகை வெளியீடு செய்யும் பத்தாவது வெளியீடு இது. எனது முதற் தொகுப்பைப் போலவே இத்தொகுப்பிலும் இடம்பெற்றுள்ள அத்தனை வேலைகளையும் கலைத்துவம் மிகுந்தனவாயும், கலாபூர்வமாகவும் செய்த அற்புதமான ஒரு படைப்பாக உங்கள் கரங்களில் தவழவிட்டவர் ஜீவநதியின் பிரதம ஆசிரியர் க.பரணீதரன் ஆவார். இலக்கியத்தில் துடிப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் க.பரணீதரன் மிகுந்த வேலைப்பளுக்களுக்கும் இடையில் எனது தொகுப்பின் அத்தனை வேலைகளையும் செய்து முடித்திருக்கின்றார். பரணிக்கு நான் நன்றி கூறுவது அவ்வளவு பொருத்தமாக இல்லாது போயினும் ஒரு தரமான,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனதியான சிற்றிதழின் பிரதம ஆசிரியர் என்ற வகையில் மிகுந்த நன்றிகளை கூறிக் கொள்வது என்பது சாலப்பொருத்தமானதாகும். அது எனது கடமையும் ஆகின்றது.

மொழிபெயர்க்கப்படாத மௌனங்கள் என்னும் எனது இத் தொகுப்பிற்கு எனது கவிதைகள் குறித்த பார்வையை அணிந்துரையாக எழுதியிருக்கின்ற நம் தேசத்து மூத்த படைப்பாளியும், திறனாய்வாளரு மாகிய கே.எஸ்.சிவகுமாரனுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

அடுத்து எனது கவிதைகளை மையமாகவைத்துக்கொண்டு என்னைப் பற்றியதும், எனது கவிதைகள் குறித்தும் தன்னுடைய குறிப்பு ரையை வழங்கியிருக்கும் ஈழத்தின் மூத்த கவிஞர் உ.சேரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். அடுத்து எனது கவிதைகளை மையமாக வைத்துக் கொண்டு இத்தொகுப்பு நூலிற்கு வாழ்த்துரையை வழங்கி யிருக்கின்ற வித்தகக் கவிஞர் பா.விஜய் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் எனது கவிதைகள் குறித்த மனப் பதிவுகளை கவிதைகளாக வழங்கியிருக்கின்ற பிரபல கவிஞர்கள் கல்வயல் வே.குமாரசாமி, த.ஜெயசீலன், நாச்சியாதீவு பர்வீன் போன்றோருக்கும் எனது இதய பூர்வமான நன்றிகள். மற்றும் எனது கலையுலகப் பயணத்திலும், படைப்புப் பயணத்திலும் என்னை வழிநடத்திக் கொண்டிருக்கும் மாமா கலாநிதி த.கலாமணி அவர்களுக்கும் எனது நன்றிகள்.

எனது கவிப்பயணத்தில் துடிப்போடு இணைந்து கொள்பவரும் தனது கருத்துக்களை அவ்வப்போது என்னோடு பகிர்ந்துகொள்பவரும், என் நலனில் அக்கறை கொள்பவருமாகிய என் நெஞ்சுநிறை ஆசான் இரா.அகிலனுக்கும் எனது நன்றிகள். எனது ஒவ்வொரு கவிதையும் வெளியாகின்ற போது என்னூடே சேர்ந்து இன்புற்று எனக்கு உத்வேகம் அளித்து வரும் எனது நண்பர்கள் க.ஜெயதர்ஷன், செ.அச்சுதன். வி.துவாரகன், ம.ஜெனார்த்தனன், சீ.தாரகன், த.சஞ்சய், பா.சுஜீவன், இ.கிரிஷ், ந.அந்தணன், சி.பிரசாத் போன்றோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

மற்றும் எனது கவிப்பயணத்தின் துடுப்புக்களாக இருக்கின்ற எனது அப்பா பா.வெற்றிவேல், அம்மா வெ.ரதி அவர்களுக்கும் எனது உறவுகளுக் கும் என் மனமார்ந்த நன்றிகள். "மொழிபெயர்க்கப்படாத மௌனங்கள்" இதனை படித்து முடித்ததும் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஓடிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு உணர்வுகளையும் ஒரு தரம் தட்டிச் செல்லும் என்ற நம்பிக்கையில் உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன் உறவுகளே.

**மிக்க அன்புடன்**
**வெற்றி துஷ்யந்தன்**
**09.10.2011**

**ரதிமஹால்**
**அல்வாய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கிருந்தோ வந்தாள்

எனக்குள்ளே
என்றுமில்லாதவாறு
ஏதோ சில
வேகம் கலந்த உணர்வுகள்
தொற்றிக்கொண்டிட
காரணமாகியிருக்கின்ற அவள்
எங்கிருந்து வந்தாள் என்னுள் ?
எங்கிருந்தோ தான் வந்திருக்கின்றாள் .

வந்த பின்னர் அவள்
தந்த அமிர்த வார்த்தைகள்
காற்றோடு கலந்த படி
எனக்கான வார்த்தைகளாய் -இவ்
அண்டவெளியில்
உலாவிக் கொண்டிருக்கின்றன .

பரந்த உலகில் ஆயிரம் ஆயிரம்
மனிதர்களிடையேயும்
என்னிடத்திலும் புகுந்த அவள்
எங்கிருந்து வந்தாள் என்னுள்ளே ?
எங்கிருந்தோ தான் வந்திருக்கின்றாள் .

என் விரல்களினிடுக்கில்
தன்னைச் செதுக்கிக் கொண்டிட
வலிமை மிக்க ஓர் ஆயுதத்தை
சொருகியிருக்கின்றாள் அவள் .
என் விரல்களின் வேகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் பொழுதுமாய்
அதிகரித்துக் கொண்டிருக்கின்றாளே அவள்
எங்கிருந்து வந்தாள் என்னுள்ளே ?
எங்கிருந்தோ தான் வந்திருக்கின்றாள் .

கேள்விக் கணைகள் நாளுக்கு நாளாய்
முளைத்துக் கொண்டிருக்கின்றன மனதில்
எனது அவலச்சுமைகளை
புறம் தள்ளி விட்டு
எனக்கான புது உலகை
தனக்கூடே அமைத்துக் கொள்ள
சிற்பியாகியிருக்கிறாளே அவள்
எங்கிருந்து வந்தாள் என்னுள் ?
எங்கிருந்தோ தான் வந்திருக்கின்றாள் .

எனது தேசத்தின்
கடந்து போன துயர நாட்களை எல்லாம்
எழுது எழுது என்று
என்னை பணித்துக் கொள்கின்றாளே அவள்
எங்கிருந்து வந்தாள் என்னுள் ?
எங்கிருந்தோ தான் வந்திருக்கின்றாள்.

அவளாய் நானும்
நானாய் அவளும்
பின்னிப் பிணைந்தவாறு
அந்நியோன்னியமாகிஇருக்கின்றோம் .
எங்கிருந்து வந்தாள் அவள் என்னுள்ளே ?
எப்படிப் புகுந்தாள் எனக்குள்ளே? ஆம்
அவள் என் தாகங்களை எல்லாம்
தனக்கூடே வெளிப்படுத்திச் செல்கின்றாளே
அந்தக் "கவி மகள்"
அந்தக் "கவி மங்கை"
எனக்குள் எப்படிப் புகுந்தாள்?
எங்கிருந்து வந்தாள் என்னுள்ளே ?
எங்கிருந்தோ தான் வந்திருக்கின்றாள் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளைச் சுமந்தோம்

எதைக் கொண்டும்
நிரப்ப முடியாத
வாழ்வின் கணங்களை
எதிர் பார்க்கைகள் நிறைந்த
கனவுகளால் நிரப்பியே
வாழ்ந்து வந்தோம்.
கடந்து வந்த காலங்களைப் போல
எம் கனவுகள் வெறும்
கானல் நீராகத்தான்.

தமிழ்க் கலாசாரத்தின்
தாய்வீடு என்றும்
தமிழ்க் கலாசாரத்தின்
சின்னம் என்றும்
எம் மண்ணை நாமே
பிதற்றிக் கொண்டோம்.

இன்று
உதட்டு வழி வார்த்தைகளில்
மட்டும் தான் கலாசாரம்
பேசி நிற்கின்றோம்.
திட்டமிடப்பட்ட திணிப்புகளுக்குள்
நின்று கொண்டு
கனவுகளைச் சுமந்தோம்
இப்படி எம் கனவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலைந்த மாயம் தான் என்னவோ?
காலப்பெருவெளியில்
நாம் சுமந்த
காட்டாற்றுத் துயர அலைகளின்
ஓசைகள்
இன்னும் எம் செவிகளில்.

கால்கள் போன திசையில்
காடு மேடெல்லாம்
நாம் நடந்தோம்.
துயரச் சிலுவைகளை சுமந்தோம்.
இருப்பினும் நம்பிக்கைச் சுவர்கள்
இன்னும் எம்முள் பலமாகவே.

ஆறாத ரணங்களின்
வலிகளினால்
நடைப்பிணங்களானோம்.
இப்போது எந்தன் நகரத்தில்
எங்களின் காலடித் தடங்களும்
சிதைவுற்ற குடில்களும் தான்
கண்காட்சிகளாகிப் போயின.

கனவுகளைத்தான் சுமந்தோம்
இந்த அவலங்களுடனான வாழ்வு
எழுச்சி பெறும் வரை
கனவுகளையே சுமப்போம்
கனவுகளில் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜங்களின் நிழலைத் தேடி...

நம்மை நம்மிலிருந்து
அந்நியப்படுத்தும்
முரண்பாடுகளின்
முடிச்சுக்கள்
அவிழ்ந்து விடுமோ என்ற
ஐயப்பாட்டில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.
நிழல்களை நிஜங்களாக
பிரதிபலித்து பிரதிபலித்து
வாழ்ந்து பழகிப் போன
எம் வாழ்வு நிலையின் மீது
நிஜங்கள் அறுபட்டு
போலிச் சித்தாந்தங்கள் தான்
வேரூன்றிப் போயின.
எந்தப் புள்ளியில்
வாழ்வைத் தொலைத்தோம்
என்று தெரியாமல்
குண்டடி பட்ட குருவியின்
சிணுங்கலாய் தொடர்கிறது
எம் சிணுங்கல்கள்.
'விட்டில் பூச்சிகள்'
தானாய் வந்து விளக்கில்
விழுந்தபோதும் கூட
அழுது ஆர்ப்பரிப்பவர்கள் தான்
நாங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத்தின் பண்பு நிலைகள்
என்றும் எம்மிடையே
இமயத்தை போன்றது தான்.
எம் குரல் வளைகள்
நசுக்கப்பட்டவை தான் - ஆனாலும்
எம் செவிப்பறைகள் இன்னும்
கூர்மையுடன் தான்.
சம்பிரதாயங்களின்
சாக்கடைக்குள் சகதிகளாக்கப்படுவது
நாங்கள் தான்.
மேலைத்தேய இசைக்கு
'ஆஸ்கார்' வழங்கிடும் கண்ணியவான்களே
எங்கள் புலம்பல்களையும்
உங்கள் பரிசீலனைக்கு எடுத்துச் செல்லுங்கள்.
இப்போதும் இங்கு
புலம்பல்கள் தான் தேசிய கீதம்.
இப்படித் தான் நகர்கின்றன
ஒவ்வொரு நாழிகைகளும்.
ஆனாலும் அழிந்த கோலத்தில்
நாங்கள் மட்டும்
தொலைந்த புள்ளிகளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்தலின் இருப்பியல்

சருகுகளிடையே
ஒளிந்து கொள்ளும் ஓணாண்களாய்
இருத்தலுக்காய்
நகர்ந்து கொண்டிருக்கிறது
வாழ்வு -
மனிதத்தின் வாசனையை
நுகர்ந்தபடியே...
காலரதத்தின் வேகத்தில்
மாறிக் கொண்டே...

மனிதத்தின் இயல்பினோடு
சமாந்தரமாய்
பயணிக்க முடியாத
இயலாமையோடு
சயனம் கொள்ளும் வாழ்வு.

விஞ்ஞானம், நவீனத்துவம் -
வாழ்தலை மாத்திரமே
மாற்றியமைத்துவிட
மனிதன்
உதட்டு வழி உச்சரிப்புக்களில் தான்
உபதேசம் செய்து கொள்கிறான்.

அவன்
அநித்தியங்கள் நிறைந்த வாழ்தலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதனங்களின் எச்சங்களை சுமந்தபடியே
பயணித்துக் கொண்டிருக்கின்றான்.
மரபு என்று மரத்துப்போவது
அவன் நெஞ்சம் தான்.

காலப் பெரு வெளியில்
நவீனத்துவ வெளிப்பாட்டிற்காய்
வாழ்தல் முறைமையை மாற்றியுள்ளான்.
ஆனாலும் -
பழமைகளின் பஞ்சாங்கங்களையும்
புராதனங்களின் புதிர்களையும்
வாழ்வு என்னும் வட்டத்தினுள்
'ரீமிக்ஸ்' பாடல்களாய்
புதுப்பித்தபடியே
வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிர்களால் நிறையும் வாழ்வு

நமக்குள் புதைந்து
கிடக்கும்
வெளிக்கொணர இயலாத
உணர்வுகளின்
உந்துதல்களினால்
வெள்ளைக் காகிதங்களை
மட்டுமே
எங்களால் தினமும்
நிரப்ப முடிகின்றது.
வாழ்தலில் மீதமாயும்,
எச்சமாயும்
நிரம்பியிருப்பது
ஏன்? எதற்கு?
என்னும்
கேள்விக்கணைகள் தான்.
புரியாமை தான்
இன்னும் இன்னுமாய்
வாழ்வினுள் தொடர்ந்தபடி.
பதில்களை பக்குவமாய்
உரைக்கும்
பவ்வியங்கள் இன்றி
வாழ்க்கை
பிடிமானங்களை தகர்த்தபடியே
நகர்ந்து செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் மௌனம்
வாழ்தலை தொலைப்பதற்கான
ஆயத்தங்களை
அறிந்தோ, அறியாமலோ
மனிதனுக்கு உணர்த்தியபடியே.
நகர்ந்து கொண்டிருக்கும்
நமக்கான வாழ்தலில்
நிரம்பியிருக்கின்ற
பதில்கள் ஏதும் அற்ற
எண்ணற்ற புதிர்களால்
எதிர்காலம் மீதான
எதிர்பார்ப்புகள் ஏதும் இன்றி
பயணித்துக் கொள்கின்றது
இந்த வாழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளில் கழியும் காலம்

கனவுகளில் கழியும்
வாழ்வினுள்
கனதிகளை சுமந்து கொள்ளும்
பக்குவங்களை
எதிர் பார்த்துக் காத்துக்கிடக்கிறது
மனிதம்.
இழப்பின் வலிகளால்
கண்ணாடித் துகள்களாய்
தவிடு பொடியாகிப்போன
வாழ்வு குறித்த எதிர்பார்ப்பை
ஏக்கச் சுமைகளை சுமந்தபடி
பயணித்துக் கொள்ள இயலாது
தடம் மாற முனைகின்றது
மனித வாழ்வு.
புதுமைகள் கலக்க முடியாது
மனத்திரை எங்குமே
கொடிய நினைவுகள்
படர்ந்து கொள்கின்றன.
செவிப்பறையைக் குடைந்து செல்லும்
மரண ஒலிகள்
இன்னமும்
ரீங்காரமிட்டுக் கொள்கின்றன.
இயல்பு என்று எதையுமே
எங்களால்
ஏற்றுக் கொள்ள முடியாதபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் ததும்பும் ஏக்கங்கள்
எழுச்சி பெறுகின்றன.
வாழ்க்கைச் சக்கரத்தின்
அச்சாணிகளையே
அச்சுறுத்தும் படியாய்
சில அநாவசியங்கள்
அத்தியாவசியங்களாகிப் போயின.
காலாதிகாலமாக
கனவுகளில் மகிழ்வு பெற்ற
எங்கள் நெஞ்சங்கள்
கனவுகளைக் கூட நம்ப முடியாது
அந்தரம் கொள்கின்றன.
எங்குமே சலனத்தின் குழந்தைகள்
தவழ்ந்து கொண்டிருக்கின்றன.
எங்களுக்கு மட்டுமே
சபிக்கப்பட்ட வாழ்வு முறையென
இவ்வாழ்வை எண்ணியபடி
கனவுகளில் கழியும்
காலத்தினோடு
பயணம் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தி அறுபட்ட வீணைகளாய்

என்னவென்று புரியாமலும்
ஏதென்று தெரியாமலும்
உருப்பெறாத சில
உணர்வுகள்
மீட்சி பெற்று
இதயத்தினுள்
தொற்றியதாய் ஒரு
உணர்வு உற்பவிப்புக் கொள்கின்றது.
வார்த்தைகளை
முழுமையாகப் பிரசவிப்பதற்கு
என் எழுதுகோல்
எழுந்து கொள்கின்றது.
இருப்பினும்
விரல்களினிடுக்கில்
இடப்பட்டிருக்கும்
சில கடிவாளங்கள்
இறுக்கம் கொள்கின்றன.
குரூரங்கள் நிறைந்துவிட்ட
இவ் அண்டவெளியில்
வாழ்வு மீதான
நிலையாமைக் கருத்தியல்கள்
இன்னும் இன்னுமாய்
அகலப்படுத்தப்படுகின்றன.
மனச்சிறைகளினுள்ளே
ஆயுட்கால நினைவுகளாய்
அடைபட்டுக் கிடக்கும் - சில
உணர்ச்சி மிகு
உணர்வுகளை
விலக்கிக் கொண்டு விட - சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன்முறை மீறிய
காரணிகள்
எழுச்சி கொள்கின்றன.
விலக்க முடியாத
நினைவுகளின் மீட்சிக்காக
கண்முன்னே சம்பவித்துக் கொள்ளும்
சில சம்பாஷணைகள்
ஆழப் பொதிந்திருக்கும்
உணர்வுக் கொப்பளங்களை
முட்டிக் கொள்கின்றன.
அடங்கிக் கொள்ளல் என்னும்
அறிவின் வனாந்தரம் கடந்து விட்ட
எம் யதார்த்த வாழ்தலில்
ஆண்டாண்டு காலமாய் நாம்
அனைத்தையுமே
அடக்கி வாழவும் பழகிக் கொண்டோம்.
என்ன செய்து விட
வன்மங்கள் எங்குமே
நிலையாக சூழ்ந்திருக்கும்
இல்வாழ்வு
குறுகிய ஒரு வட்டத்தினுள்
குறுகிக் கொள்கின்றது.
மனந்திறந்து
அழுது கொண்டிடக் கூட
கண்களிடம் அனுமதி பெற வேண்டிய
துர்ப்பாக்கியசாலிகளாகிப் போனோம்.
இவ் வாழ்க்கை எமக்கு
இதுவரை இனித்ததில்லை
நம் ஆயுளின் அந்தி வரை
உணர்வுகள் உடைபட்டு
எல்லாவற்றையும்
மனச் செடிகளினுள்ளே
பொசுக்கிய படியே
ஆகிப்போனோம்
தந்தி அறுபட்ட வீணைகளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சும்மா இருத்தல் பற்றி

மனித வாழ்வின்
இருப்பினுள்
எதிர்காலம் குறித்த
கேள்விகளும் பீதியும்
நெஞ்சினுள் நிறைந்து கொள்வது
சும்மா இருத்தலின்போது
இருத்தலுக்கான
அடையாளங்கள்
தொலைக்கப்பட்டனவான உணர்வு
தொற்றிக் கொள்வது
சும்மா இருத்தலின்போது,
'என்ன செய்கின்றாய்' என்னும்
கேள்விச் சரங்கள்
ஏடாகூடம் கொள்வது
சும்மா இருத்தலின்போது
சும்மா என்னும் சொற் பதம்
அன்றாட வாழ்வினுள்
உதட்டு வழி அழியா மந்திரமாய்
தொடர்ச்சி கொள்கிறது.
களிம்புகள் பூச முடியாத
ஆறாத காயங்கள் - இதய
விளிம்புகளில் அடைபட்டு
அந்தரம் கொள்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா இருத்தலின்போது.
ஏளனங்கள் எழுச்சி கொண்டு
சமாளித்துக் கொள்ளலின்
அடிநாத வார்த்தையாய்
அலங்காரம் கொள்வது
'சும்மா' என்னும் வார்த்தையன்றோ...?
சுமைகளின் இருப்புக்கள் - எம்
இமைகளின் வழியே நீர் சொரியும்
இச் சும்மா இருத்தல் கூட
ஒரு வகையில்
அணு அணுவாய்
மனதைக்கீறிடும்
சுகம் தரும் சுமை தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருக்கள் கலைகின்ற காலம்

கவி புனைகின்ற ஒவ்வொரு
கணங்களும் எனக்குள்
ரணங்களாய்த்தான்
கழிந்து விடுவதுண்டு.
வழமையைப் போன்று
கவிதைக்கான கருக்கள்
என்னிடம் ஏதும் இல்லை
இப்போதைய பொழுதுகளில்.
இருப்பினும்
கருக்களை
உருப்பெறச் செய்யும்
சிந்தனையில் நெஞ்சம்
அலைந்து திரிகின்றது.
ஒரு கருவை தேர்ந்தெடுத்த
கணங்களில்
அதிலிருந்து எங்களையும்
கவனித்துக் கொள்ளுங்கள்
என்றாற்போல
புதுப்புதுக் கருக்களின்
பிறப்புகள்
கிளைகளாக விருட்சம்
கொள்கின்றன
ஆங்காங்கே.
அசாதாரணங்கள் நிறைகின்ற
இந்த (அ)கால வெளிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றும்
இன்னொன்றுகளாக
மொழி பெயர்க்கப்பட்டுக் கொள்கின்றன
பயத்தின் பந்துகள்
அடிவயிற்றைக்
கிளறிக் கொள்கின்றன.
வெள்ளைத்தாள்களில்
பேனா முனை பதிகின்ற
ஒவ்வொரு கணங்களும்
ரணங்களாகும் படி
பயங்கரங்கள் சூழ்ந்து கொள்கின்றன.
வெறும் ஆடம்பரங்களையும்
அணிகலன்களையும் போட்டு
மொழிகளை அலங்கரிக்க
பிடிமானம் இல்லை எனக்கு.
உள்ளதைச் சொல்ல வேண்டும்
உள்ளவாறு சொல்ல வேண்டும்
உரத்துச் சொல்ல வேண்டும்
என் இதய அவாக்கள்
கனாக் காண்கின்றன.
எதைச் சொல்வது?
எப்படிச் சொல்வது?
மீண்டுமாய் கேள்விகள்
என்னுள்
பிறப்பெடுத்துக் கொள்கின்றன.
"வாழ்தலின் இருப்பு"
கேள்விக்குறியாக்கப்பட்டிருக்கும்
ஒரு நிலத்தில் இருந்து கொண்டு
இந்தக் கேள்விக் கணைகள்
என்னை நோக்கிப் பிறத்தலொன்றும்
புதிய தல்லவே.
பேனாமுனை வெள்ளைத்தாளில்
மெல்லப் பதிகின்ற கணங்களில்
புதிதாய் முளைவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருப்பெறாத அச்சங்கள்
குழப்பிச் செல்கின்றன
என்னுள் விரிந்து கிடக்கும்
எழுதத் தூண்டும் எண்ணங்களை.
விரல்களினிடுக்கில் சின்னஞ்சிறு
நடுக்கங்கள் இப்போதும்
குடியேறித்தான் இருக்கின்றன.
என்னுள் தேக்கம் கொள்ளும்
'கருக்கள்' என்னவோ
சரியான தருணங்களில்
பதியப்படாது போயின
கலைந்து போகின்றேன் என்று
என்னோடு
கங்கணமிட்டுக்கொள்கின்றன.
இறுக்கங்களுக்குள்ளும்,
நெருக்குதல்களுக்கிடையேயும்
அந்தரித்துக் கொள்ளும்
இவ் வாழ்தலில்
ஒவ்வொரு தடவைகளும்
கவிபுனையும் தருணங்களில்
பயங்களும், போலிச் சித்தாந்தங்களும்
குழப்பிச் செல்கின்றன
எனது கவிதைக்கான கருக்களை
மீண்டும் மீண்டும்
உருப்பெற முனையும்
எனது கவிக் கருக்கள்
கலைந்துதான் போகின்றன
இந்தக்
கருக்கள் கலைகின்ற காலத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதட்டில் புன்னகை தொலைத்தோம்

இருள் கவிழ்ந்து கொட்டி
கனன்று கொண்டிருக்கும்
இந்த இரவுகளில்
தொடரும் இன்னல்களாய்
நாளுக்கு நாள்
அரங்கேறிடும்
அரங்கேற்றங்களை
பார்த்தபடியே
பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.
தூக்கங்களுக்காக
மடல்களைக்கூட
மூடிவிட முடியாமல் விழிகள்
சஞ்சலமுற்றுக் கொள்கின்றன.
காலநதியின் ஓட்டத்தினூடு
இறந்த காலத்தை
சமகாலத்தினோடு
ஒப்பீடு செய்து கொள்கின்றது
மனித நெஞ்சம்.
எதை எதை எழுதுவது
எதற்கெதற்கு அழுவது
என்று புரிந்திடாத
ஜடங்களாய்
நாழிகைகளை நகர்த்திய படியே
நகர்ந்து கொண்டிருக்கின்றோம்.
அநித்தியமாகிப் போன - எம்
இருப்புகளிற்கிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழப்புகளைத்தான்
பல்வேறு கோணங்களாய்
நாளுக்கு நாள்
சந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.
எம் மழலைச் செல்வங்களின்
உதடுகளில் கூட
புன்னகைப் பூக்கள்
இன்னமும் வாடிய படியேதான்.
இழப்பு இழப்பு என்று
இருந்திருந்த அத்தனையையும்
இழந்தோம்.
உதடுகளில் புன்னகையை
இழந்தோம்.
அத்தனையை இழந்திருந்தும்
நம்பிக்கைச் சுவர்களின்
பலங்களினால்
வாழ்ந்திருந்தோம்.
ஆனால் இப்போது
எமது இருப்பின்
அடையாளமாயும்
எம்முள் ஆழ வேரூன்றியிருந்த
எமதான மொழியையும்
இழந்து ஏதிலிகளாகிப் போயினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி பெயர்க்கப்படாத மௌனங்கள்

இன்னல்களோடு
இரண்டறக் கலந்துவிட்ட
இருண்ட இவ்
இரவுகள்
விடியலின் வருகைக்காய்
தவமிருந்தபடியே.
தூக்கமில்லாத விழிகள்
தினமும் விழித்தவாறே
விடியலை எதிர்பார்த்துக்
காத்துக் கொண்டிருக்கின்றன.
நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு
எங்கோ ஒரு மூலையில்
தெரு நாய்களின்
அபாய ஊளையிடும் ஒலிகள்
ஒலித்தவாறே செல்கின்றன.
சில்வண்டுகளின் ரீங்காரங்களை
மேவிடும் அபாய சமிக்ஞைகள்
வரவிருக்கின்ற
இன்னல்களுக்கா?
ஆயிரம் கேள்விகள்
இன்னமும் முளைவிட்டவாறே.
அசாதாரணங்கள் எங்கும்
நிறைந்திருக்கின்ற
இவ் இரவுகளில் மாத்திரம்
இப்படியல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்ந்து கொள்கின்ற
நாட்களிலும்
எங்கும் மௌன சாம்ராச்சியம்.
ஏதோ ஒரு உருப் பெறாத
அச்சம்
பின்தொடர்கிறது.
யதார்த்தம்
உரைக்கப்பட
மொழிகள் திராணியற்றுத்
தொண்டைக்குள்
சிக்கிக் கொள்கின்றன.
மௌன தேவதை
எல்லோர் இதயங்களிலும்
நிரந்தர வாசியாகியிருக்கின்றாள்.
எங்கும் எதிலும்
வினாக்குறிகளே தொக்கி நிற்பனவாய்.
விடைகளை உரைத்திட முடியாது
எங்கும் ததும்பும் மௌனமாய்
தொடரும் இவ்வாழ்தலில்
சில மௌனங்கள்
இன்னும்
மொழிபெயர்க்கப்படாமலேயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோகணங்களும் அவரோகணங்களும்

வாழ்வு வெளிகள்
எங்கினும்
படிந்திருக்கின்ற
வாழ்வியலின் இருப்பு குறித்த
எச்சங்கள் யாவும்
கொஞ்சம் கொஞ்சமாய்
நழுவிக் கொள்கின்றன
இப்போது.
மனவெளிகள் எங்கினும்
நிலையாக குடியேறியிருக்கின்ற
வெறுமைகளும், சூனியங்களும்
சிறிதளவேனும் குறைந்திடாது
அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன.
அர்த்தங்களின்
நெருக்குதல்களிலிருந்தும் கூட
மீள முடியாதவாறு மனிதம்
சிக்குண்டு கொள்கிறது.
அகால இரவுகள் யாவும்
கடந்து போன துயர நாட்களை
நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.
நாளுக்கு நாளாய் வந்து
குவிந்து கொண்டிருக்கும்
கொடிய சம்பவிப்புக்களின்
விம்பங்கள் யாவும் கபாலத்தை
குடைந்து கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கங்களைத் தன்னிலும்
நம்ப முடியாதவாறு
எல்லாமே இயல்பற்றுப் போயிருக்கின்றன.
எங்கள் சஞ்சலங்களுக்கெல்லாம்
அரிதாரம் பூசிக் கொள்ள
அரங்கேற்றங்கள் நிகழ்ந்து கொள்கின்றன.
ஏன்? எதற்காக இவை?
நாங்கள் நாங்களாகவே
இருந்து விடுகின்றோம்.
எங்கள் துயரச்சுமைகள்
கணத்திற்குக் கணம்
கனம் கூடிக் கொண்டிருக்கின்றன.
எல்லாமே இயைபற்றபடி
தொடரும்
எங்களுக்கான இவ்வாழ்வில்
எங்கள் வாழ்வாதாரங்கள்
அவரோகணங்களாகப்
பயணித்து விட
எங்கள் துயரங்கள் மட்டுமே
நாளுக்கு நாளாய்
ஆரோகணங்களாகிக்
கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத முடியாத எழில்கள்

சூரிய அஸ்தமனம்,
நிலவொளியிலான
இராத்திரி.
நட்சத்திரக் கூட்டங்கள்,
கரையைத் தழுவும் அலைகள்,
தென்றல் மோதும்
தென்னங்கீற்று,
அம்மாவின் தாலாட்டு
காதலியின் கண்கள்,
மழலையின் சிரிப்பு
இவை எல்லாம்
வார்த்தைகளால்
எழுதப்படமுடியாத
எழில்கள்.
எழுதப் போயினும்
வார்த்தைகளுக்கான
பஞ்சங்கள் மட்டுமே
எஞ்சியிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சப்பிராந்திய இரவுப் பிரகடனம்

என்னைப் பேச விடுங்கள்
இனிமேலும்
எனது பேனாவை
வைத்துக் கொண்டு
உள்ளே குமுறிக் கொண்டிருக்கும்
உணர்வுகளை பொசுக்கி வைத்து
"அடை" காத்திட முடியாது.
அறியப்படாத வாழ்வில்
அறியப்பட்டுக்கிடக்கின்ற
பயங்கரங்களை மாத்திரமே
ஒவ்வொருவரது மனங்களும்
சுமந்து கொண்டிருக்கின்றன.
நிகழ்வெளி எங்கினும்
நிகழ்ந்து கொள்ளும் - கொடிய
நிகழ்வுகள் யாவும்
பயங்களை மாத்திரமே
பரிசளித்துக் கொண்டிருக்கின்றன.
உருப்பெறாத அச்சங்கள்
ஒருபுறமாய் எமை வதைக்க
உருப்பெற்ற அச்சங்கள்
எம்மை பின் தொடர்கின்றன.
இந்த இரவுகளுக்குத் தன்னிலும்
எம்மில் இரக்கம் இல்லையா?
தலையணைகள் எல்லாம்
மகிழ்வெளிகளில்
நீந்திக் கொண்டிருக்கின்றன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கு இப்போதைக்கு
வேலைகள் இல்லை என்றாற் போல.
நடுநிசியில்
நிசப்தத்தையே தகர்த்த படி வரும்
அச்சம் நிரம்பிய மொழிகள்
அச்சப்படுத்திக் கொள்கின்றன
ஒவ்வொரு இராக்களையும்.
இரண்டு சாமப் பொழுதுகளும்
ஒரு சாமமாகத்தான்
கழிந்து கொண்டிருக்கின்றது.
உண்மைகள் புரிந்தும்
புரியப்படாமல் கிடக்கின்றன.
எம் சான்றாதார
வாதங்கள் எல்லாம்
"பூதங்களிடம்" தோற்றுப் போகின்றன.
இப்படியே கழிந்து கொண்டிருக்கும்
ஒவ்வொரு இராக்களும்
எங்களுக்காக மட்டும்
"அச்சப்பிராந்திய இரவுகளாக"
பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றதோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயாகிப்பான நான்

வலுப்பெறும் வலிகளோடும்
உன் நினைவுகளால் விளையும்
வாழ்வனுபவ புதிர்களோடும்
புலர்ந்து விடுகின்றது
எனக்கான விடியல்கள் .

இருப்பினும் சில
நிர்ப்பந்தங்களின் நிமிர்த்தமாக
கேள்விக்குறியாக்கப்பட்டிருக்கின்றது
எனது இருப்பும் நம் நேசமும் .
என் மீதான உன் பிரியமும்
உன் மீதான என் நேசமும்
நம் நாட்டு
போர்க்கால அகதியாய்
அவஸ்தைப்பட்டுக் கொள்கின்றன .

எப்போதும் போல
என் செவிப்பறையை செப்பனிட்டுக்கொள்ளும்
உன் வார்த்தைகள்
குரூரங்களை குதறியது ஏனோ ?
இற்றை வரை அதன் பிரதிபலிப்பாய்
என் இதய நாளங்கள்
அதிர்ந்தபடியே இருக்கின்றன .

தற்காலிகம் எனக் கருதி
தடைசெய்யப்பட்ட உனதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நேசமும் வார்தைப்பிரசவங்களும்
நிரந்தரமாகிப்போனது.
என் உருவம் உந்தன் நிழலாய்
தொடர்ந்து கொள்கிறது.

என் மீதான உனது பிரியம்
தகர்ந்துபோனது என்றிருந்த எனக்கு
மாறுதல்களின் விளைவாய்
அண்மைக்கால
உனதான என்னைப்பற்றிய
அநாவசிய அக்கறைகளும்
விதண்டாவாத விசாரிப்புகளும்
உரிமை அதிகாரமும்
நான் உன்னிலிருந்து அகலவில்லை
என்பதை எனக்கு உணர்த்திவிட்டுச்செல்கின்றன .

நான் அப்படியே தான் இருந்து கொள்கிறேன்
உன் மீதான எனது பிரியமும்
அப்படியே தான் இருந்து கொள்கின்றது .
நானாக இருந்த நான் நானாக இல்லாது
மீண்டுமாய் இப்போது
நீயாகிப்போனேன் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயில்லா வேளை பார்த்தே...

மாயைகளின் சிருஷ்டிப்பு
நிறைந்து விட்ட
எங்களுக்கான இவ்வுலகில்
இப்போது
உன்னைப்பற்றி பேசுவதிலேயே
மனிதம் குறியாயிருக்கிறது
இறைவா.

மனித சிந்தையின்
வெளிப்பாட்டிற்கு
முரணானவன் அல்லன் என்ற
இறுமாப்பில் உன்னை
கேள்விச்சரங்களினால்
சூடிக் கொண்டிட
என் நெஞ்சம் விளைந்து
கொள்கிறது இறைவா.

பிறப்பு, இருப்பு, இறப்பு
என்று வழமையாகிப்போன
மனித வாழ்வில்
உன் இருப்பில் மட்டும்
ஏன் இத்தனை
ஐயப்பாடுகள்?
நீ விந்தையானவனா?
உண்மைகளின் உற்பவிப்பில் – எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையில் அழியாத
தெய்வமாய்
இருப்புப் பெற்றிருக்கிறாயே
நீ விந்தையானவன் தான்.
உன் மௌனத்தின்
புரிதல்கள் மட்டும்
இன்னும் புரியப்படாமலேயே.

உன் உருவம் இன்னும்
கண்களுக்குள் புகுந்து
கொள்ளாமையினால்
எத்தனை எத்தனை
நச்சரிப்புக்கள் இங்கு.
நீயில்லா வேளையில்
புதிதாய் முளைவிடும்
வேதாந்தங்கள்
அரங்கேற்றம் கொள்கின்றன.
உந்தன் நாமத்தின் பெயரால்
எத்தனை வாதப்பிரதிவாதங்கள்.

உன்னை நேர்ந்து
உன்னிடத்திலிருந்து அருட் கடாட்சம் பெற்ற
மனிதக் கூட்டம் கூட
உன்னை
தூற்றிக் கொள்கிறது
நாஸ்தீகம் பேசிக் கொள்ளும்
நாஸ்தீகர்களின் ஈனங்களால்
உன்னைப் போற்றிப் பாடிய
தேவார திருமுறைகள் கூட
இப்போது
கறையான்களிற்கு இரையாய்.

உன்னைக் கல் என்கிறார்கள்
நீ ஜடம் என்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ இல்லையென்று கூட
உரைக்கிறார்கள் இறைவா.
இப்படி
நாளுக்கு நாள்
உன்னைப் பற்றிய
ஊகங்கள்
இன்னும் இன்னுமாய்
தொடர்ந்த படியே தான்

தூற்றுவோர் தூற்றட்டும்
உந்தன் பெயரால்
உருகிடும்
பல இலட்சம்
பக்தகோடிகளுக்காவேனும்
முழுமையாய் வராவிடினும்
உன் இருப்புக் குறித்த
கேள்விக்கு
பதில் தாராயோ
எல்லாம் வல்ல இறைவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்

இப்போதெல்லாம் முன்னரை விடவும்
யார் மீதும் சரி வாழ்வு மீதும் சரி
ஆழ்ந்த விருப்புக் கொண்டு விட
சம்மதம் தர மறுத்துக் கொள்கிறது மனம்.
தனி மனித விருப்புக்களே
வெற்றிடங்களாகிக் கொண்டிருக்கின்றன.
சாவு தன்னும் இப்போதுகளில்
பெரிய விடயமாயில்லை.
எல்லாமே இப்போது
சர்வ சாதாரணங்களாகிப் போயின.
எதையுமே தாங்கிக் கொள்ளல்
என்னும் பண்பு பழகிப்
போனது நெஞ்சில்.
எழுதிக் கொள்வதற்கான
விடய தானங்கள் யாவும்
தினம் தினமாய்
அதிகரித்துச் செல்கின்றன.
இப்போதைய இரவுகளும்
பயங்கரங்களை மட்டுமே
சுமந்து கொள்கின்றன.
குடியிருந்த கூடுகள் யாவும்
குலைக்கப்பட்டு
எம் தேசத்து சின்னஞ் சிறு
குருவிகளின் முகங்களில்
வடுக்களும், வலிகளும் வலு விசாலமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறி உட்கார்ந்திருக்கின்றன.
எம் உதிர மை கொண்டு
எழுதப்பட நிறையவே
இருக்கின்றன இங்கு.
புரையோடிப் போன எங்கள்
பெருநிலத்தின் வாசனைகள்
அகற்றப்பட்டுக் கொள்கின்றன.
புதுமைக்குள் புகுத்திக் கொள்ள
எத்தனை அங்கலாய்ப்புக்கள் இங்கு...
பழமையுள் ஆழ்ந்தவர்களாகவே
நாம் இருந்து விடுகின்றோம்.
எவ்வளவு நாளைக்குத்தான்
வலிகள் நிறைந்திருக்கின்ற
ஒவ்வொருவரது முகங்களையும்
ஒவ்வொருவர் பார்த்துக் கொள்வது.
ஓ..... மறந்து விட்டேன்.
நாங்கள் எல்லோரும் ஆதியிலிருந்தே
வலிகளால் ஆசீர் வதிக்கப்பட்டவர்களல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தன் சாம்பல்களினிடையேயும்

அர்த்தங்களுக்கான அளவுகோல்களும்
வரையறைகள் ஏதும் இன்றியே
பரந்த வெளிகளில்
படர்ந்து கொள்கின்றன சொற்கள்.
எனக்குள் குவிந்து கிடக்கும்
வெளிக்கொணரக் கூடிய
உணர்வுகளை சுமந்து கொள்ள
மறுத்துக் கொள்கின்றன சொற்கள்.
என்னுள் நிகழ்ந்து கொள்ளும்
முரண்பாட்டுத் தர்க்கிப்புகள்
என்னிலும்
எந்தன் சொற்களிலும்
தங்களுக்கான எதிர்வினைகளை
பிரதிபலிக்கச் செய்கின்றன.
அதனால்தான்
நான் இறந்த பிறகு
என்னுள் என்னால் கட்டிக்காக்கப்பட்ட
இரகசியங்களையும்
அவற்றிற்கான
வீரியமிக்க சொற்களையும்
என்னுடன் சேர்த்தே
எரித்து விடுங்கள்.
ஒருவேளை என்னூடே
எரிந்து கருகிச் சாம்பலானவை
என் இரகசியங்களாக மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து விடக் கூடும்.
எந்தன் சொற்கள்
அடிபணிதலுக்கு அப்பாற்பட்டவை
வீழ்ந்த போதும்எழுந்து
பயணம் கொள்ளும்
குதிரையைப் போன்றன.
அதனால் தான் சொல்கிறேன்
என்னை எரித்த சாம்பலை
திருப்ப திரும்ப
கூர்ந்து அவதானித்துக் கொள்ளுங்கள்
என் சிதையின்
சாம்பல்களிடையேயும்
புதிதாய் முளைவிட்டு
பம்பரமாய்ச் சூழலும்
எனக்கான எனது
சொற்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ப்பன் இல்லாத மந்தைகள்

புரிந்து கொள்ள முடியாத
வினாக்களாய் நின்று
விடைகளுக்கான
அத்தியாவசியம் ஏதும் இன்றி
புரியாமையின் ஆதிக்கத்திற்கு
அடிபணிந்து செல்லவேண்டிய
நிர்க்கதியில்
மனிதம் சிக்குண்டு கொள்கிறது.
எப்படியாகிப் போனோம்
இப்படி? என்று
எண்ணியபடியே
ஆண்டுகளுக்கு மட்டும் தானே
விடை கொடுக்கின்றோம்.
எங்கள் அவலச் சுமைகளை
எப்படி இறக்கி வைக்கப் போகிறோம்?
பாலைவனமாக்கப்பட்டிருக்கும் - இப்
பெருநிலத்தின் இடையே
திசையறியாது
தனித்து விடப்பட்டிருக்கின்றோம்
மேய்ப்பன் இல்லாத மந்தைகளாய்.
எதை எதைச் சொல்வது?
எப்படி சொல்வது?
சொல்லப்படாமலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லப்படாமலும்
அந்தரம் கொள்பவை
ஆயிரமாயிரம் தான்.
உயிரைத் துளையிட்டுச் சென்ற
வேதனை மிகு நினைவுகள்
அனல் பரப்பிச் செல்கின்றன
இதயத்தினுள்.
ஏதுமறியாத ஏதிலிகளாக
ஏக்கம் கொண்டுவிடுகின்றது
மனம்.
சூனியங்களே எங்கும்
முளைவிடும்
எம் மனவெளி தனில்
நிலவொளி படரும் காலம்
எதுவோ...?
இத்தனை காலமாய்
முகாரியை மாத்திரமே
மீட்டித் திரிந்த
எம் இதய வீணைகளில்
எதற்காக
பூபாளத்தை மீட்ட முனைவதாக
பாசாங்கு செய்து கொள்கிறீர்?
நொந்து போன எங்கள் இதயங்கள்
நொந்ததாகவே இருக்கட்டும்.
இந்த மண்ணில்
ஆழப் புதைந்து கிடப்பவை
பிணங்கள் மட்டுமல்ல
எங்கள் உணர்வுகளும் தான்
என்றுரைத்தபடியே
வாழ்ந்து கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயலென எழுவாய் அவனியில்

அவனி போற்றி
பவனி வருகின்ற – எம்
தாய்மை என்னும்
புனிதத்தின் அடையாளங்களே
உம்மை எண்ணி
பெருமை கொள்கிறது
பேனாமுனை கூட.
பாரதியின் கனவினை
நனவாக்கிக் கொண்டிருக்கும்
பெண்ணினமே நீ
கடந்து வந்த பாதைகள்
கொடூரமானவை.
நீ அனுபவித்த அனுபவங்கள்
மிகக் குரூரமானவை.
உன் விடுதலையில் மாத்திரம்
எத்தனை பரிதவிப்புக்கள்.
நீ விடுதலை பெற்றதாய்
உன் முன்னேற்றங்களும்,
உயர்ச்சிகளும்
பறை சாற்றிக் கொள்கின்றன.
இல்லை இல்லவே இல்லை
உன்னைச் சுற்றி
இன்னும் வன்மங்கள்
அதிகரித்துக் கொள்கின்றன.
உன்னைக் குறித்த கேள்விகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மீதான கட்டுப்பாடுகளும்
அகலப்படுத்தப்படுகின்றன.
விண்கலத்தில் நீ விஞ்ஞானியாக,
விமானத்தில் நீ விமானியாக
இப்படி இப்படி
எல்லாத்துறைகளிலும்
உன் முன்னேற்றங்கள்
முன்னேறிக் கொண்டிருக்கின்றன.
நவீனங்கள் மலிந்து விட்ட - இவ்
அண்ட வெளியில் இப்போதும்
வரதட்சணை என்னும் கொடு நோயால்
உன் இனம்
வாட்டம் கொள்கிறதே.
உன்னைச் சுற்றி
பொல்லாத கொடு நாகங்கள்
வட்டமிட்டுக் கொள்கின்றன.
இப்போது உன் இனம்
அடக்குமுறையினுள்ளேயே
சிக்குண்டிருக்கிறது.
நீ கடந்து வந்த பாதைகள் போல
எழுந்து செல்
நிமிர்ந்து நில்
தடைகளைத் தகர்த்தெறிந்து
புயலென எழுந்து நில்
இவ் அவனியில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளின் வார்த்தைகளுக்கு மட்டுமே

அடர்ந்த வெளி
சில்லென்று வீசும் காற்று,
அங்குமிங்குமாய் அலையும்
மனது,
ஆறுதல் சொல்லி
தேறுதல் அடைய மறுக்கும்
இதயம்.
இவற்றுக்கு நடுவேயும்
என்னை
முட்டிமோதி
வெட்டி வீழ்த்திடத்துடிக்கும்
மனச் சஞ்சலங்கள்
இவை அனைத்தும்
இன்று நேற்றாய் மட்டும்
என்னோடு
பின்தொடர்கின்றவை அல்ல
அந்த ஒரு ஜீவனால்
என்னோடான சொற்கள்
உதடுகளின் வழியே
அரைமனதுடன்
நிறுத்தி வைக்கப்பட்ட
நாள் முதலாய்
தொடர்ந்து கொள்கிறது
என்னோடு.
இனம் புரியாத சங்கடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினம் தினமாய் நீள்கிறது.
செவியினுள் புகுந்திட மறுக்கும்
அவளுக்கே உரித்தான
கனிய பேச்சொலிகளுக்காக
தவம் கிடக்கிறது நெஞ்சம்.
பிணங்களை மட்டுமே
இந்த மண் கண்டதாய்
கனவு கண்டு கொள்ளாதீர்
எத்தனையோ
நடைப் பிணங்களையும்
இந்த மண்
தன்னில் அலைய விட்டு
அழகு பார்த்துக் கொள்கிறது.
அந்த வகைமைக்குள்
புகுந்து கொண்டிட
ஆயத்தம் கொள்கிறது
இவ் ஆவி.
புயல் காற்று வீசினும்,
கடலலை ஆர்ப்பரித்துவரினும்
என்னை அழிக்கும் வல்லமையும்,
என்னை வாழ வைக்கும் ஆற்றலும்
வீரியம் மிக்க
அவளின் வார்த்தைகளுக்கு
மட்டுமே
என்றும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த இடத்தாலான
# எனது அந்தரமுறு பயணம்

அந்த வீதியால் தான்
சென்று வந்தேன் இப்போது
அந்த இடத்தை கடந்து
செல்கின்ற போது
என்னுள்ளே இனம்புரியாத
மனக்கிலேசங்கள் எழுந்து கொள்கின்றன.
வெறுமையும், அமைதியும்
எங்கும் படர்ந்திருக்கின்றது.
இவ்வளவு நாளாய்
அந்த வீதியால்
பயணம் கொள்கின்றபோது
பயணிகள் எதுவித பராக்குகளும்
இன்றியே பயணம் கொள்வர்.
இன்றோ அந்த இடத்தைக்
கடந்து செல்லும் ஒவ்வொருவரும்
தங்கள் கவனத்தையும்
பார்வைகளையும்
அந்த இடத்தின் மீது
செலுத்தி விட்டுத் தான் செல்கிறார்கள்.
அவர்களின் பார்வைகளில்
ஏக்கம் எங்கும் ததும்புகின்றது.
கடந்து செல்பவர்கள்
மனதிலே என்ன நினைத்தவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இடத்தை பார்வையிட்டு செல்கிறார்கள்?
அறிந்து கொண்டிட வேண்டும் போல
இருக்கின்றது.
கனவுகள் ஏராளம் தான் மனதிலே
நினைவுகள் படர்ந்து கொள்கின்றது.
உடல்களில் மட்டும் தான்
ஊனங்கள் அல்ல இங்கு.
உடல்களாய் வாழ்ந்து கொண்டிருக்கும்
விம்பங்களிலும் ஊனங்கள் தான் இங்கு,
வெட்கித் தலைகுனிந்து கொள்கிறது மனிதம்.
வழமையான ஏக்கங்கள் தான் ஆயினும்
நெஞ்சுக்குள் பொசுக்கி வைக்கமுடியாமல்
சில உணர்வுகள் வெளிக்கிளர்ந்து கொண்டிட
முண்டியடிப்புக் கொள்கிறது.
என்னை என்ன செய்து விடச் சொல்கிறீர்கள்?
நான் என்ன செய்து கொள்ள
எத்தனையோ ஜீவன்கள்
என்னைப்போலத்தான்
சிந்தித்துக் கொள்கின்றார்கள்.
முன்னொரு காலத்தை
கண்முன்னே நிறுத்தியவாறு
கடந்து செல்கின்றேன் அந்த இடத்தை விட்டு
என்னால் என்ன செய்து விட முடியும்?

05.07.2011 12.33 பி.ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் அறிவை சந்தேகித்தலாய

கனலாய் கனன்று கொள்ளும்
நனவாகா கனவுகளிடையேயும்
அனலாய் எரித்துக் கொள்ளும்
சில ஏக்கங்கள் நெஞ்சை.
மனித வாழ்வினுள்ளே
ஆங்காங்கே எச்சங்களாய்
படிந்து கொள்கின்ற
வலிகளும், ஏமாற்றங்களும்
நொறுங்குண்ட மனதினிடையேயும்
அர்த்தங்களின் நெருக்குதல்களிலிருந்து
மீள முடியாது அந்தரித்துக் கொள்கிறது
மனிதம்.
இவ்வளவு இழப்புகளினுள்ளேயும்
எதையுமே சகஜமாக ஏற்றுக் கொள்ள
தயங்கிடும் மனித மனம்
சாவினை வலிந்து வரவழைக்க
எழுந்து கொள்கின்றது.
தன்னைத்தானே கொலை செய்ய
துணிந்து விடுகின்றது.
ஆறாம் அறிவின் இருப்பையே
சந்தேகித்தலாய
அநாவசிய முடிவை
நாடிச் செல்கின்றது.
எதற்காக கண்ணாடித்துண்டமாக
மனதை பாவனை செய்கிறீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் தான் மனம்
துகள்களாகிப் போகின்றன.
வலிமைமிக்க பாறாங்கற்களாக
நினைத்துக் கொள்ளுங்கள்.
வேண்டாத முடிவுகள்
வேதனையாகிப்போகும்.
ஜீரணிக்க முடியாத
சம்பவிப்புக்கெல்லாம்
தற்கொலைகள் தான்
முடிவாகிப்போயின்
நாளுக்கு நாள் பிணக்குவியல்கள் தான்
நடு வீதிகள் தோறும் இங்கு
அண்ட வெளிதனில்
அதிசயமிக்க பிறப்பாய்
ஜனனித்த மனிதம்
ஒரு நொடிப் பொழுதில்
வாழ்வை அழித்தல்
அறிவியலின் வனாந்தரம் கடந்த
முறை தானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை எதுவும் கேளாதீர்கள்

புழுதிகள் அங்குமிங்குமாய்
படிந்திருக்கின்ற
எனது வீதிகளில் தான்
தினமும் நான் பயணம் கொள்கிறேன்.
முன்னொரு காலத்தில்
எனது வீதிகள் இப்படியிருந்ததில்லை
புழுதிகளும் இப்படிக் குவிந்ததில்லை.
இப்போது நாளுக்கு நாளாய்
புழுதிகள் குவிந்து கொண்டு தான்
இருக்கின்றன
வீதிகளில் மட்டுமல்ல மனங்களிலும் தான்.
விழித்திரையினுள் சேமிக்கப்பட்டிருக்கின்ற
விலக்கப்பட முடியாத விம்பங்கள்
காட்சிகளாய் படர்ந்து கொள்கின்றன.
என்ன நடந்து கொள்கின்றது
என்னை எதுவும் கேட்காதீர்கள்.
பதில்களை பக்குவமாய் உரைக்கும்
பக்குவம் இப்போது என்னிடம் இல்லை.
பக்குவப்படுத்தி எழுதும் திராணியும்
என் எழுத்துகளிடமும் இல்லை.
எதை எழுதுவது எப்படி எழுதுவது
சொற்களுக்கு பஞ்சங்கள்
நிறையவே உண்டு இங்கு.
நிலவினைக் கோடுகளால் மறைக்க முடியாது
மறைத்துக் கொள்ளினும் நிலவு
மறைந்திடாது.
எழுத்துக்கள் யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுக் கருத்துக்களாய் மொழிபெயர்க்கப்படுகின்றது.
இதுதான் நான் பிறந்த தேசமா?
இப்படித்தான் எந்தன் நகரம் இருந்ததா?
இவ்வளவு காலமாய் என் நகரம்
இப்படி இருந்ததில்லையே?
ஆயிரமாயிரம் கேள்விகள்
முளைவிடுகின்றன.
பதில்கள் இருந்தும்
என்னைநோக்கி வர மறுத்து விடுகின்றன
பதில்கள்.
என்னை எதுவும் கேட்காதீர்கள்
இது எந்தன் நரகம் அல்ல.
நவீனம் என்ற நகரம் இது.
நான் ஓடி விளையாடித்திரிந்த
ஆலமரத்து நிழல்களினுள்ளே
அரசமரங்களை யார் வலிந்து நடுகை இட்டது?
எந்தன் நிலத்தில் மட்டும்
எதற்காக யாருக்காகக் இந்த வலிந்த நடுகைகள்?
என்னை எதுவும் கேட்காதீர்கள்
எல்லாவற்றையும் எடுத்துரைப்பதற்கு
என் குரல் வளைக்கு தன்னிலும்
தைரியங்கள் இல்லை.
சூனியங்கள் தான் இப்போதும்
மனதினிடையே
அறுவடை செய்யப்படுகின்றது.
அனைத்தையுமே எம்மளவில்
மறைத்து வாழப் பழகிக் கொண்ட
நாங்கள் இப்போதும்
பாலை வனங்களாய் தான்
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்
என்னை எதுவும் கேட்காதீர்கள்.
எல்லாவற்றையும் உரைக்கும்
பக்குவம் என்னிடம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறிந்திடாத எங்கள் வீட்டு வாழை

நீண்டு வளர்ந்து
பச்சைப் பசேலென
நிமிர்ந்து நிற்கின்றது
எங்கள் வீட்டு வாழை.
முக்கனிகளில் முத்தானது
என்றதாலும்
வாழைப் பழம் மீதான
அலாதிப் பிரியத்தினாலும்
நிதம் நிதம்
தண்ணீரூற்றியே
வளர்த்து வந்தோம்.
மங்கலத்தின் வெளிப்பாடாயும்
சில கணங்களில்
அமங்கலத்தின் குறியீடாயும்
எம் வாழ்வியலோடு
பின்னிப் பிணைந்தன
இந்த வாழைகள்.
தனது காலத்தில்
தன்னாலான அத்தனை
நன்மைகளையும்
மனிதனுக்கு வழங்கிய பின்னரே
மடிந்து போகின்றன
இவ்வாழைகள்.
எதிர்பார்ப்புகளின் நம்பிக்கையில்
இருந்திருந்த எங்களுக்கு
முந்த நாள் வீசிய கடும் காற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறிந்து மடிந்து போயிற்று
அந்த வாழை என்று
என் சுற்றத்தார் தோட்டத்தை
பார்த்து என்னிடம் கூறினர்.
முறிந்தது எங்களுடைய வாழை அல்ல.
நிரூபிப்பதற்கான சான்றுகள்
நிறையவே இருக்கின்றன என்னிடம்.
எந்த வித பயன்களும் தராமல்
எப்படி மடிந்து போகும் அந்த வாழை?
கேள்விகள் புதிதாய் பிறத்தலெடுக்கின்றன.
மடிந்தது எங்களுடைய
"அந்த" வாழை அல்ல.
இருப்பினும் சந்தர்ப்பங்களின் சூழ்ச்சிகளினாலும்
முறிந்த வாழைகளுக்கு நிவாரணம்
என்ற அறிவிப்பினாலும்
மனிதத்தின் சபலம் பொறி தட்ட
முறியாத எங்கள் வாழை
முறிந்ததாக கருதியே
வாழ்ந்து வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசா மடந்தையாய்

எனக்குள் குவிந்து கிடக்கும்
உனக்கான வார்த்தைகள்
உன்னோடு பேசிக் கொள்வதற்கான
ஆயத்தங்களை
என்னுள்
நிகழ்த்திக் கொள்கின்றது.
நம்மிடையே
ஊசலாடிக் கொண்டிருக்கும்
உறவு நிலையின் மீது
ஏதும் தெரியாதவளாய்
நீ
கேள்விக் கணைகளை
தொடுத்துக் கொள்கின்றாய்.
எது வித முன்னறிவிப்புக்கள்
ஏதும் இன்றி
என்னுடனான பேச்சொலிகளை
நீ நீயாகவே தடை செய்திருக்கிறாய்.
என் கண் முன்னே
விரிந்து வியாபகம் கொள்ளும்
அத்தனை இடங்களிலும்
பிரதிபலிப்பாய் உன் விம்பம்
என்னை சமரசம் செய்து கொள்கிறது.
பேசா மடந்தையாய்
தினமும் சென்று கொண்டிருக்கிறாய்.
என்னைக் கடந்து செல்கின்ற
பொழுதுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை அறியாமலே
என்னை நோக்குகின்ற
உன் விழிகளை
நீ வலிந்து
சிறைப்படுத்திக் கொள்கின்றாய்.
உன்னோடு பேச எத்தனிக்கும்
என் உணர்வுகளை
புரிந்தும் புரியாதவளாய்
பாசாங்கு செய்து கொள்கிறாய்.
ஒவ்வொரு விடியல்களும்
உன்னோடான பேச்சொலிகளுக்கான
எதிர்பார்ப்பினூடே
விடிந்து விடுகின்றது.
என் மீதான கோபதாபங்களையோ,
நம்பிக்கையீனங்களையோ
பிரேரணைகளாக நீ
என் முன்னே சமர்ப்பிக்கும் வரை
என் மீது
உனது இந்த நடவடிக்கை
உன்னையறியாமலேயே
தொடர்ந்து விடப் போகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிமூடித் தூங்கா இரவுகள்

சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும்
இப்பூமிப் பந்தில்
கடந்து வந்த நாட்களைப்போல
மீண்டும் இப்போது
எம் வாழ்வு மீதும்
இருப்பு மீதும்
கேள்விக் கணைகள்
முளைவிடத் தொடங்குகின்றன.
விழி மூடித் தூங்க முடியாது
தினந்தோறும்
விழி பிதுங்கியே கழிக்கின்றோம்
இவ் இரவுகளை.
இன்னல்கள் இனி இல்லை என
வாய்ச் சொல்லில் கேட்கிறோம்.
அமைதியின் ஆர்ப்பரிப்பை
குலைத்த படியே
மீண்டும் கொடிய இரவுகள்
எம்மோடு
தாண்டவமாடத் தொடங்குகின்றன.
சொல்லாத சேதிகளாய் பல
சொல்லமுடியாதனவாய் சில
இரண்டிற்கும் இடையில்
இயங்க முடியாது
அந்தரமுறுகின்றோம்.
எதுவும் எப்போதும்
நிலையற்றது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் யதார்த்த வாழ்தலில்
பொறிக்கப்பட்டிருக்கும்
பொன் மொழிகளை
கீறிட்டுக் கொள்கிறோம்.
எம் மனக்கதவுகள்
அழிவுகள் என்னும்
கூரிய ஆயுதங்களால்
ஏலவே குத்திக் கிழிக்கப்பட்டிருக்கின்றன.
இப்போதும் எம்
மனைக் கதவுகள் நள்ளிரவில்
உடைக்கப்படுகின்றன.
சில இரவுகளில் சேதிகள் கேட்கிறோம்
மறுநாள் விடியல்களில்
சேதிகளாகின்றோம்.
நிம்மதியின்மையின் தருவிப்பினால்
வலிந்து கொண்டே தூக்கத்தை
வரவழைத்துக் கொள்கிறோம்.
இது தான் எம் வாழ்தலின்
நியதி என்றுரைத்தவாறே
மீண்டும் இப்போது
இரவுகளிடம் மண்டியிட்டுத்
தவம் கேட்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதோடு மழைக் காலம்

மனத் திரைகள் எங்கும்
மௌனமுற்றிருக்கும்
அழியாத ஞாபகங்கள்
அலைமோதிக் கொள்கிறது
நெஞ்சத்தினோடு.
எனது இருப்பின்
நிச்சயங்களை
நிர்ணயிப்பனவாய் - அவை
அர்த்தம் கொள்கின்றன.
அவாவுற்றிருக்கும் என் நிலத்தின்
அழிக்க முடியாத வடுக்களிடையேயும்
வாலிபம் எங்கினும்
நிறைந்திருக்கின்ற
வர்ண சொப்பனங்கள் மிகுந்த
நினைவுகளை
மீட்டிக் கொண்டிட
மௌன யுத்தம் ஒன்று
என்னுள் உணரப்படுகின்றது.
எதை எதையெல்லாம்
எண்ணிக் கொள்வது என்று
எண்ணிட முடியாது
எங்கும் நிறைந்தனவாய்
பல அழிவுறா ஞாபகங்கள்.
இதயத்தினுள் ஒட்டிக் கொள்கின்றன.
கோடிகள் கொடுத்திடினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளப் பெற முடியாத
பள்ளிக்கூட நாட்களை
திரும்பப் பெற முடியாது
சஞ்சலம் கொள்கிறது மனது.
புதுப் புது பட்டங்களாய்
ஆண், பெண் வேறுபாடின்றி
கூறி அழைத்த பட்டமளிப்பு நாட்களை
நகைச்சுவையோடு எண்ணுகிறது
நெஞ்சம்.
அவ்வப்போது இதயத்தினுள்
குதித்தோடும் நதியாய்
காதல் ஞாபகங்கள் ஒரு புறமாயும்
காதல் நினைவுகளை மீட்டிடும்
திரையிசை கீதங்கள் மறுபுறமாயும்
குடைந்து செல்கிறது விழிகளினுள்ளே.
தேதிகள் இட்டுக் கிறுக்கிக் கொண்ட
கவிதைகள்
யாருமே பார்த்திடாமல்
பவ்வியம் கொள்கிறது குறிப்பேட்டில்.
புகையிரத வேகமாய்
சென்று கொண்டிருக்கும்
இவ்வாழ்தலில்
அழிவுறா இஞ்ஞாபகங்கள்
என்றும் நீங்கிடாது
குளிர்ச்சி மிகுந்தனவாய்
ஒட்டிக்கொண்டிருக்கும்
மனதோடு மழைக்காலமாய்
என்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட மறந்த குயில்கள்

பயங்கரங்கள் எங்கினும்
சூழ்ந்து கொண்டிருக்கும்
பொல்லாத இரவுகள்
படர்ந்து கொள்ளும் - அந்த
கானகத்தில்
நிசப்தத்தையே
கிழித்து வரும்
நித்தியமாகிப் போன
காட்டு ராஜாக்களின்
கர்ச்சனைகளுக்கிடையேயும்
ரம்மியங்கள் நிறைந்த
கானங்களாலும்
நளினங்கள் நிறைந்த
ஆடல்களாலும்
அடர்ந்த வனங்களையே
ஒன்றிப்பனவாய்
அந்தக் குயில்கள்.
தெவிட்டாத தென்றலாய்
நெஞ்சங்களை
அலங்கரிக்கும் நாதமாய்
குயில்களினது பாடல்களும்
மயில்களினது ஆடல்களும்.
சந்தோச மேகங்கள்
புடை சூழ
இன்ப ஊற்று மழையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டிக் கொள்ள
கானகமே
சங்கீத ரீங்காரங்களில்
மூழ்கிப் போயிற்று.
குயில்களினது ஆரவாரங்களையும்
மயில்களினது ஆடல்களையும்
சகித்துக் கொள்ள முடியாத
ஆக்கிரமிப்பின் நாயகன்
காட்டு ராஜா
தனது கர்ச்சனைகள்
புஷ்வாணமாகிப் போய் விடுமோ
என்னும்
அச்சத்தின் பால்
குயில்களினதும், மயில்களினதும்
சிறகுகளையும், குரல் வளைகளையும்
பலாத்காரமாக ஒடித்தும்
இரத்தங்களை குடித்தும்
பிணங்களாக்கியிருக்கின்றது
சொந்த வனத்தினுள்ளேயே.
கர்ச்சனைகளின் முகிழ்வுகளினாலும்
ஆக்கிரமிப்பின் கொடூரத்தினாலும்
பாட முடியாத குயில்களும்
ஆட முடியாத மயில்களும்
ஊமைகளாகியும்,
ஊனங்களாகியும்
போயின இப்போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக்கதவை மோதும் சஞ்சலங்கள்

பூட்டப்பட்டுக் கிடக்கின்ற
மனக்கதவின்
வாசலில் நின்று கொண்டு
உள்நுழைந்து கொள்வதற்கு
காத்துக் கிடக்கின்றன
எங்கும் நிரம்பியிருக்கின்ற
சஞ்சலங்கள்.
அவை
விரும்பியோ விரும்பாமலோ
அனுமதி பெறாத
விருந்தாளியைப் போல
முன்னறிவுப்புக்கள்
ஏதுமின்றி
உள்நுழைந்து கொண்டுவிட
கங்கணமிட்டுக் கொள்கின்றன.
ஏலவே
உள்நுழைந்து
கபாலத்தை
குடைந்து கொண்டிருக்கும்
அரக்க முடியாதவாறு
அந்தரம் கொள்ளும்
துயர நினைவுகளிடையே
இப்போது
மீண்டுமாய்
அனுமதிகள் இன்றியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நுழைந்து செல்வதற்கு
வரிசைக்கிரமங்களாய்
முண்டியடிப்புக் கொள்கின்றன.
புதிதாய் முளைக்கும்
வேதனைப் பயிர்கள்.
எல்லாவற்றையுமே
மனக்கதவுகளினுள்ளே
பூட்டி வைத்தவாறு
வாழப் பழகிக்கொண்ட
எம்மிடையே
மீண்டும் உள்வர
காத்துக்கிடக்கும்
வேதனைச் சுமைகளை
விருப்பார்த்தம் ஏதுமின்றி
உள் இருத்துவதற்காய்
எம்மையறியாமலே
மெல்ல மெல்லவாய்
திறந்துகொள்கின்றன
எம் மனக்கதவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைவனத்திலோர்
# பனை நிழலாய் என் நகரம்

மானுடத்தின் மாண்பு
மாண்டு கொண்டிருக்கும்
இம் மண்ணில்
மனிதத்தின் சபலங்கள்
ஒன்றோடு ஒன்று
சங்காரமிட்டுக் கொள்கின்றன.
ஒரு காலத்தில்
பாலைவனமாக
தனித்து விடப்பட்ட
எந்தன் நகரத்தில்
பனை நிழலும் உண்டென்று
இப்போது தான்
புரிதல்களின் துளிர்
முளை விடத் தொடங்கியிருக்கின்றது.
என்றும் இல்லாத ஆரவாரங்களும்
படையெடுப்புகளும் இப்போது
எந்தன் நகரத்தை நோக்கி.
எல்லாக் கழுகுக் கண்களும்
எந்தன் நகரத்தைத் தான் எல்லாவற்றுக்கும்
குறிவைக்கின்றன.
போர் அரக்கன் நிலையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடத்தே வழங்கியுள்ள
ஆறாத ரணங்களும்
மாறாத வடுக்களும் தான்
இப்போது எல்லோருக்கும் பார்வைப் பொருளாய்.
கால மாற்றம் எல்லாவற்றையுமே
மாற்றிக் கொண்டிருக்கின்றது.
மீதமாயிருக்கின்ற நம்பிக்கைகளில் கூட
நம்பிக்கை இல்லை.
ஏன்? எதற்கு? என
வினாக்கள் மட்டும் தான்
விடைகள் இன்றி மன வெளிகளில்
படர்ந்திருக்கின்றன.
நாளுக்கு நாளாய் இங்கு
ஒவ்வொரு கோணங்களில்
திணிப்புகளை மட்டும் தான்
நாம் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம்
வேறு எதையுமே அல்ல.
என்ன செய்து கொள்ள
நமக்கென விதிக்கப்பட்ட வாழ்வென்று
சுமைகளை சுமந்தவாறு
வாழ்ந்து கொள்வோம்
இப் போலி வாழ்வை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பூபாளம் முகாரியாகின்றது

பூபாளத்தை மட்டும்
ஆலாபனை செய்து வந்த
எங்களின்
நெஞ்சத்து வீணைகள்
இப்போது
முகாரியை நிரந்தரமாகவே
தம்மில்
ஆலாபனை செய்துகொள்கின்றன.
கண்முன்னே
விரிந்து கிடக்கும்
புதிய புதிய ராகங்களை
மீட்டிக்கொள்ளுமாறு
அவ்வப்போது
அங்கலாய்ப்புக்கள்
குவிந்தபடியே தான்.
இருப்பினும்
களிம்புகள் பூச முடியாது
நரம்புகளில்
ஆழப்பதிந்துவிட்ட
முகாரிக் கொப்பளங்களினால்
புஷ்வாணமாகிக் கொள்கின்றது
புதிய ராகங்களின் மீட்டுகை.
பூபாளங்கள் நிறைந்திருந்த
வாழ்க்கைச் சக்கரத்தில்
வேரூன்றிப் போன
முகாரிகளின் முண்டியடிப்புகளினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை எத்தனை
விழுக்காடுகள் தினம்.
பிறந்தோம், இருந்தோம், இறந்தோம்
என்னும்
வாழ்க்கைத் தத்துவத்தின்
ஒழுங்குவரிசையில்
சீர்குலைவாய்
பிறந்தோம், இறந்தோம்
என
சில நிகழ்கால தத்துவங்களை
கண்முன்னே கண்டிருக்கின்றோம்.
பூபாளத்தின் வாசனையோடு
பயணித்துக்கொண்ட
இந்த மனித வாழ்வு
மாறுதல்களின் விளைவாய்
முகாரியாகிக் கொள்கின்றது..
இப்போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுகிய இதயங்கள்

ரோபோக்களுக்கு
உணர்வு கொடுத்திட
உழைத்துக் கொள்கிறான்
அறிவியல் மனிதன்
அங்கு.
ரோபோக்களுக்கு எப்படி
பேதங்கள் உரைத்து
பாகுபாட்டை வளர்க்கலாம்
என்று
சிந்தித்துக் கொள்கிறான்
இதயம் இறுகிய
அறிவில்லா மனிதன்
இங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரம்பாத வெற்றிடங்கள்

இறைவன் இருக்கின்றான்
என்கிறது
ஆத்திகம்.
இறைவன் இல்லை
என்கிறது
நாத்திகம்.
இருப்புக்கும்
இல்லாமைக்கும்
இடையில்
விரிந்து கிடக்கும்
'வெற்றிடம்' மட்டும்
காலாதிகாலமாக
வெற்றிடமாகவே
கிடக்கின்றது.
இந்த வெற்றிடங்களுக்குரிய
பதில் வார்த்தைகள்
ஒவ்வொருவரது மனங்களிலும்
கேள்விக்குறியாகவே
இருக்கின்றன.
இறைவன் இறங்கி
வந்தாலே ஒழிய
வராத வரைக்கும்
'ஆத்திகம்'
வென்று கொண்டு தான்
இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைப்பில்லா கவிதைகள்

மனம் குழம்பி
நெருக்கடியான
சூழ்நிலைகளில்
என்னைச் சாந்தப்படுத்த
உன்னை நினைந்து
அடிக்கடி எழுதிக் கொள்வேன்
பல நூறு கவிதைகள்
தலைப்பேதும் இல்லாமலேயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளும் நினைவுகள் - 2

இன்னும் மணந்து
கொண்டு தான்
இருக்கின்றது
எனது கிராமத்தின்
மண்வாசனையும்
மண்வாசனையோடு கமழும்
அழியாத ஞாபகங்களும்.
அவை என்மனதினிடையே
கொடியாய் படர்ந்து
முனகிக் கொண்டே தான்
இருக்கின்றன
ஒவ்வொரு மூலைகளிலும்.
காலமாற்றம் புதுமைகளை
தந்து இருப்பினும்
பழமை என்றுரைக்க முடியாத
பல இனிய நினைவுகள்
மீளும் நினைவுகளாய்
மறுபடியும் என்னை
சிறுபராயம் நோக்கி
அழைத்துச் செல்கிறது.
ஆலடியான் சூழல்
எமதூரின் அனைவரும்
ஒட்டி உறவாடிய சூழல்
பொன்னான சூழல்.
ஆலமரத்து ஆலம்பழங்களை
போட்டிக்காக பொறுக்கி
தொகை அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் ஒரு பெருமிதம்
கொண்டோம்
அது ஒரு காலம்.
பெலி வைரவரின் முன்வாயிலில்
கிட்டிப்புள்ளில் மோகம் கொண்டு
சுட்டிப் பையன்களாய்
சுற்றி வந்தோம்.
சற்றே அங்கால் நகர்ந்து
சின்ன வெட்டை மணலில்
பிரியமான விளையாட்டாய்
விளையாடித்திரிந்த
"போளையடி" நாட்களை
எண்ணிப் பார்கிறது நெஞ்சம்.
இருபத்தைந்து சதங்களும்
பத்துச் சதங்களும்
இப்போது
எங்கள்
"போளை"ப் பேணிக்குள்
பத்திரமாய் இருந்த படியே.
கச்சானின் காணிக்குள்
படை நடவடிக்கை ஒன்று நடக்கும்.
சத்தஞ் சருகேதுமில்லாமலே
நகரும் எம் படையணி
குலை குலையாய் நிலம் நோக்கி
பயணிக்கும் செவ்விளநீர்கள்.
பங்குகள் புறிக்கப்பட்டு
வழுக்கை தின்னும் போது
பெருமூச்சுடன் கூடிய
பெருமிதம் தோன்றும்.
சற்று நிமிடத்தில்
"டோய்" என்றொரு சத்தம்
எம்மை நோக்க
முட்கம்பி வேலிகள் எல்லாம்
முயல்களாய் தாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிச் செல்வோம்
கோயில் நோக்கி.
இப்போது நினைக்கையிலும்
புன்னகை இயல்பாகவே
மலர்கிறது.
மீளும் நினைவுகள்
எழுத விழையும்
இந்நேரம்
என்பேனா முனை கூட
துடிப்புள்ள சிறுவனாய்
இனிய நினைவுகளை
மீட்டிக் கொண்டு விட
இயங்கிக் கொண்டிருக்கிறது.
ரியூசன் 'கட' அடிச்சு
களவாய் சென்று
பார்வையிட்ட எம் "கழகத்தின்"
உதைபந்தாட்ட போட்டிகளையும்
ஒரு நாளில்
இறுதியாட்ட தோல்வி
தாங்காது
அழுதபடியே வீடு வந்த
நாட்களையும்
எப்படி மறப்பது.
'நொச்சியடி' வெட்டை
சொல்லும்
ஆயிரம் கதைகள்.
எமதூரின் எத்தனை
தலைமுறைகளின்
பாதச்சுவடுகள்
அந்த மண்ணில்.
மழை காலப் பெருநாள்
ஒன்றில்
"நொச்சி" வெட்டையில்
மழையில் பந்து விளையாடி

"சச்சி"யின் "அம்பிசிலி"னோடு
சளியுடன் போராடிய நாட்கள்
இப்போதும் என் கண்முன்னே.
இரண்டு குழுவாகப் பிரிந்து
எறிகணைத் தாக்குதலாய்
மாறும்
"மண்ணாங்கட்டி 'பையிற்'றுடன்
மகிழ்ந்த காலங்கள் எங்கே?
எங்கள் தலைகளில்
நாளும் பொழுதும் அப்போது
மண்திட்டிகள் தானே.
ஆலடியான் திருவிழாவும் வரும்
இராப்பொழுது வரும்
கள்ளத்தீனை மனம் நாடி
'காவோலை' அப்பமும் வாங்கிக்
கொண்டு
"கேவோலை" வரைக்கும்
ஓடித்திரியும்
எங்கள் "கள்ளன் பொலிஸ்"
விளையாட்டுப் படையணி.
இன்னொரு பத்து நாள்
வேண்டும் போல மனம்
அலை பாயும்.
இப்போதும் அப்படித்தான்.
பாலர் பாடசாலை நாட்கள்
அவை அழியாத
பொக்கிஷங்கள் என்றும்.
காலை புலர்நததும்
கால்கள் நகரும் 'நேசறி' நோக்கி.
தேவாரத்தோடு தொடங்கும்
ஒவ்வொரு பொழுதும்.
தேவாரம் பாடி முடித்திட
என் செவியினுள் நுழையும்
பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவின் ஆலடியான் மீதான
பாராயணம்.
மனம்மாறிக் கொள்ளும்
புத்தகப் பை எனது கைக்குள்
மாறிக்கொள்ளும்.
நிலத்தில் வீழ்ந்து அழுது புரண்டு
ஐயாவிடம் ஓடிச்சென்று
ஐயாவின் சைக்கிளிலே
முன்னுக்கிருந்து
“ரெக்ககட்டி பறக்குதடா
ஐயாவோடை சைக்கிள்”
என்று, இப்போதும்
என்னால் மறக்க இயலாத
பாடல் பாடி
என்னைப் பேசும் ஐயாவை
சிரிக்க வைத்து
வீடு வந்து சேர்ந்த நாட்கள்
எனது ஒவ்வொரு
அணுக்களிலும் இப்போதும்
உயிர்த்துடிப்பான நினைவுகளாய்
வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

காலங்கள் மாறலாம்
வாழ்வியற் கோலங்களும்
மாறலாம்
எவை எவ்வாறாயினும்
என் வாழ்வின்
சிறுபராய நினைவுகளாக
வரும்
இவ் “நினைவழியா நாட்கள்”
மீளும் நினைவுகளாய்
என்றும்
உயிர்த்துடிப்புடன்
வாழ்ந்து கொண்டேயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி பெயர்க்கப்படாத மௌனங்கள் என இன்றைய யாழ்ப்பாண வாழ்வை சித்திரிக்கும் துஷ்யந்தனின் கவி மொழி பூபாளங்கள் முகாரியாகும் அவலத்தையும் நயமாக பதிவு செய்கின்றன. சஞ்சலம், வேதனை, சுமை என எல்லாமே எங்குமே பழகிப் போனவையாயினும் துஷ்யந்தன் அவற்றின் நிகழ்களத்தைக் காட்டுகின்ற முறை வேறானதாக இருக்கின்றது. அப்படி அவர் காட்டுகின்ற போது எம்மை அறியாமலே மெல்ல மெல்ல திறந்து கொள்கின்றன நமது மனக் கதவுகள்.



புதிய தமிழ்க்கவிதை புதியவடிவங்களோடும், புதிய வார்ப்புக்களோடும் புதிய திசைகளுக்குச் சென்று விட்டது. அதன் ஒரு முகத்தை “அந்தரமுறு பயணம்” எனச் சுட்டி நிற்கின்றன துஷ்யந்தனின் கவிதைகள்.

- சேரன்

ISBN 955527871-7

அச்சமைப்பு : மதி கலர்ஸ் நல்லூர். 0212229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org